செங்கோல்

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்

மலர் 12] சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1993, தை 22 (4-2-62) ஞாயிறு, 30 பைசா [இதழ் 10

வேலூர் மாநாட்டு காட்சிகள்

படத்தில் நடுவிலிருக்கும் பகுதி, வேலூர் மாநாட்டுப்பந்தலின் முகப்புத் தோற்றம். அதன் இருபுறமும் த. தே. க. தலைவர் ஈ. வே. கி. சம்பத்தும், பி. சோ., தலைவர் டாக்டர் எஸ். விசயலட்சுமியும்.

(1) மாநாட்டுத் தலைவர் ஊர்வலமும், தலைவர் ம. பொ. சி. அமர்ந்துள்ள விமானமும் (2) புஷ்ப விமானத்தில் ம. பொ. சி., கவிஞர் தி. க. சண்முகம், பட்சி இராசகோபால் ஆகிய மூவரும் அமர்ந்திருக்கும் தோற்றம். (3) முதல்நாள் மாநாட்டு மேடையில் ம. பொ. சி., ஜீவானந்தம், ஈ. வே. கி. சம்பத், கவி. கா. மு. ஷெரீப், எஸ். கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் காட்சியளிக்கின்றனர்.

கண்டேன், கண்டறியாதன கண்டேன்!

(அடியான்)

தமிழரசுக் கழகம் வளர்ந்து வரும் கட்சியா? — அல்லது வளர்ச்சியின்றித் தேங்கிக் கிடக்கும் கட்சியா?— என்ற வினா எழுந்தால், மெதுவாக— ஆனால், உறுதியாக வளர்ந்துவரும் கட்சி என்று விடையளிப்பர் வேலூரில் நடைபெற்ற மாநில மாநாட்டைக் கண்டவர்கள். தான் வளர்த்த பலரை காங்கிரஸ் கட்சியிடம் பறிகொடுத்த பின்னரும், அந்த இழப்பு தெரியாத வகையில் மிகச் சிறப்போடு நடந்தது மாநில மாநாடு. சென்னை நகரில் நடைபெற்ற முதலிரண்டு மாநில மாநாடுகளில் திரு. வி. க., தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற பெரும் புலவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அவர்களில் ஒருவரை இழந்து, மற்றொருவரைப் பிரிந்த நிலையில் சென்னை மாநாடுகளைவிட சிறப்பாக நடைபெற்றது சேலம் மாநாடு! அந்த மாநாட்டிலே சின்னஅண்ணாமலை, ஜி. உமாபதி போன்றவர்கள் பங்கு கொண்டு சிறப்பு பெற்றனர். அவர்களும் பிரிந்து சென்ற நிலையிலே சேலம் மாநாட்டினும் மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது வேலூர் மாநாடு!

இதிலிருந்து யார் பிரிந்து சென்றாலும், எவர் மறைந்து மாண்டாலும் தமிழரசுக் கழகம் வாழும், வளரும் என்ற உண்மை புலனாகிவிட்டது.

நான், ஜனவரி 18ந் தேதி இரவு வேலூருக்குச் சென்றேன். முதல் காரியமாக மின்சார விளக்குகளால், ஒளிபெற்றுத் திகழ்ந்த மிகப் பிரம்மாண்டமான மாநாட்டுப் பந்தலைக் கண்டேன். அடே அப்பா! இவ்வளவு பெரிய பந்தலை நிரப்ப மக்கள் திரளுவார்களா?— என்று ஒரு கணம் திகைத்தேன்!

நான்மட்டு மல்ல, மாநாட்டுப் பந்தலை முதன் முதலாகப் பார்த்த நமது இயக்கத் தோழர் ஒவ்வொருவரும் என்னைப் போலவே திகைப்பும் வியப்பும் அடைந்தனர்.

என்னோடு வந்த தோழர் ஒருவர் சொன்னார் "இவ்வளவு பெரிய பந்தலைப் போட்டு 'மாநாடு நடந்தது, மக்கள் திரளவில்லை'யெனப் பகைவர் பழிப்பார்களே" என்று.

இன்னொருவர் சொன்னார், "பந்தல் நிறைய மக்கள் திரண்டாலும் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு அவர்களை ஒழுங்கு படுத்தி அமைதியைக் காக்கத் தொண்டர் படை

நிதிகள் எல்லோரும் பிரதிநிதிகள் மாநாட்டிற்குப் புறப்பட்டனராதலால், நானும் கவலையை மறைத்து அவர்கள் பின் சென்றேன்.

சுமார் 500 பேர் கொள்ளக் கூடிய ஒரு சத்திரத்தில் பிரதிநிதிகள் மாநாடு ஆரம்பமானது. அவ்வளவு பேருடைய மிதி அடிகளையும் ஒழுங்காக வைத்து, நம்பிக்கையாகத் திரும்பவும் எடுப்பதற்கு சத்திரத்தில் இடவசதி இல்லை. ஆகையால் சுயகாரியப் புலியாகிய நான்என் மிதியடியை பேப்பரிலே மறைத்து கக்கத்திலே வைத்துக்கொண்டு பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டேன். ஆனாலும் எனக்கும் பயந்தான். யாரேனும் முன்பின் அறியாதவர்கள் என் கக்கத்திலிருக்கும் சாமானைக் கண்டுவிட்டால் என்னை அந்தக் கழகக்காரன் என்று சந்தேகித்து முதுகில் தாளம் போட்டு விடுவார்களோ என்ற பயம். ஆனால் நல்ல வேளையாக அடுத்தவனைச் சந்தேகிக்கும் பார்வையே அந்த மாநாட்டில் காணோம்.

ஆம்; பிரதிநிதிகள் மாநாடு என்ற உடனே மிகக் காரசாரமாக விவாதம் நிகழும், ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும் இருக்கும், 'வேலூர்'களும் நிகழலாம் என்று என்னோடு வந்த பிரதிநிதிஅல்லாத ஒரு புதியவர் முதல்நாள் இரவு முழுதும் ரயில் பயணத்தில் என்னைப் பயமுறுத்திக் கொண்டே வந்தார். 'தம்பி'யை 'அண்ணா' தூண்டிவிட்டாரே, அதனால் அந்த நண்பருக்கு அச்சம் போலும்! ஆனால். தூண்டிவிட்ட 'அண்ணா'வையே அங்கு காணாத போது தம்பியர் தோன்றுவரோ!

'வேலூர்' நிகழவில்லை என்றால், பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் இருந்தார்கள் என்று பொருளல்ல. மாநாட்டுத் தலைவர் ம.பொ. சி. செயற்குழுத் தீர்மானங்களை ஒவ்வொன்றாகப் பிரரேபித்த போது, சிலர் விளக்கங்கள் கோரினார்கள். இன்னும் சிலர் திருத்தங்கள் சொன்னார்கள். வேறு சிலர் ஆட்சேபனையும் கூறினார்கள். அவ்வளவுக்கும் சமாதானம் சொல்லி எல்லோரையும் திருப்திப்படுத்தி தீர்மானங்கள் அனைத்தையும் நிறை வேற்றி வைத்தார் மாநாட்டுத் தலைவர்.

பொதுத் தேர்தல் பற்றிய பிரச்னை விவாதத்திற்கு வந்தபோதுதான் பிரதிநிதிகள் மாநாட்டில் நல்ல விருவிருப்பிருந்தது. விவாதம் சூடாக இருந்ததோடு மிகமிகச் சுவையாகவும் இருந்தது. சூடு அதிகப்படாமலிருக்க, இடை இடையே தமது 'துணுக்கு'களால் பிரதிநிதிகளை நகைச்சுவையில் ஆழ்த்தினார் தலைவர் ம. பொ. சி.

பிரதிநிதிகள் மாநாட்டில் செயற்குழு உறுப்பினர்கள் ஒரு மந்திரி சபைக்குரிய கட்டுப் பொறுப்புணர்ச்சி உடையவர்கள் என்பதைக் காட்டியது. வியப்பென்ன வென்றால், காங்கிரசை முழுக்க முழுக்க ஆதரிக்க வேண்டுமென்று ஒருவர் கூடப் பேசாதது தான். 'தம்பியர்' அவ்வளவு பேரும் தெளிந்த அரசியல் ஞான முடையவர்கள் என்பதைக் காட்டினார்கள். அதுபோலவே, சோசலிசத்தை எதிர்க்கின்ற, நாட்டைத் துண்டாட விரும்புகின்ற சக்திகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடாது என்பதிலும் பிரதிநிதிகளிடையே கருத்துவேற்றுமை இல்லை.

விவாதம் பகல் ஒன்றரை மணி வரை நீண்டது. நான்கூட எதிர்பார்த்தேன். முன்னுரையிலேயே தேர்தலில் இன்னாரை ஆதரிக்கலாம் என்று தலைவர் குறிப்புக் கொடுத்து, அந்த அடிப்படையில் விவாதத்தைத் துவக்கிவைப்பாரென்று. ஏனெனில் 'மாஜி அண்ணா' தலைவரைப் பற்றி எனக்கு எழுதியது அப்படி!

ஆனால், தலைவர் நான் எதிர்பார்த்தபடி. தாம் ஒன்றை முடிவு கட்டிக் கொண்டு அதை யார்மீதும் திணிக்க முயற்சிக்கவில்லை. தேர்தல் பிரச்னையை மூன்று அம்சங்களாகப் பிரித்து, ' இந்த மூன்றில் எந்த ஒன்றுக்குப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் ஆதரவு தருவதாக இருப்பினும் அதனை ஏற்றுச் செயல்படுத்த நான் தயார்" என்று கூறிவிட்டார். அதே நேரத்தில் பிரதிநிதிகளுக்குத் தெளிவை உண்டாக்க ஒவ்வொரு அம்சத்திலுமுள்ள சாதகபாதகங்களையும் விளக்கிக் கூறினார் தலைவர்.

நீண்ட விவாதத்திற்குப் பின்னர், தேர்தல் பற்றி இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு மத்திய செயற்குழுவிடம் விடப்பட்டது.

சுமார் மூன்றரை மணிக்கே மக்கள் திரண்டு விட்டனர்.

தலைவர் திரு. ம. பொ. சி. மேடைக்கு வந்தபோது பிரதிநிதிகள் உணர்ச்சிப் பெருக்குடன் வாழ்த்தொலி எழுப்பி ஆரவாரம் செய்து வரவேற்றபோது மெய்சிலிர்க்க, என் கை சலிக்க, வாய்சலிக்க நானும் கை தட்டியும் வாழ்த்துரை கூறியும் உணர்ச்சிப் பெருக்குடன் பங்கு கொண்டேன்.

த. தே. க. தலைவர் ஈ. வெ. கி. சம்பத் தமது துணைவியாருடன் மேடையில் காட்சியளித்தார். கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ப. ஜீவானந்தம், பி. சோ. கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர். எஸ். விசயலட்சுமி ஆகியோரெல்லாம் மேடையில் அமர்ந்திருந்தது 'தமிழினமே ஒன்றுபடு' என்று நீண்ட காலமாக நாம் கோஷித்து வந்தோமே அது வெற்றி பெற்று வருவதையே காட்டியது.

வழக்கறிஞர் திரு. எஸ். கே. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். அன்று மாநில சுயாட்சிக் கொள்கையை அவர் விளக்கிப் பேசிய விதம் பந்தலுக்கு வெளியே இருந்து கேட்டவர்களுக்கு ம. பொ. சி.தான் பேசுகிறாரோ என்றஎண்ணத்தை ஏற்படுத்தி இருக்கும், ஆம்! அவ்வளவு திறமையாகவும் தெளிவாகவும் விளக்கம் தந்தார்.

பொதுச் செயலாளர் கவி. கா. மு. ஷெரீப் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாநாட்டிற்குத் தலைமைதாங்கி மாநில சுயாட்சிப்பாதையிலே தமிழரசுக் கழகம் அடைந்து வந்துள்ள முன்னேற்றத்தை உரைநடையில் ஓவியம் தீட்டிக் காட்டினார்.

வேலூரில் பேசிவிட்டு சென்னை திரும்பி, அன்றிரவே பம்பாய்க்குச் செல்ல வேண்டியிருந்ததால் திரு. சம்பத் முதலில் பேச அனுமதிக்கப்பட்டார்.

கழக மேடையிலே, ம. பொ. சி. முன்னிலையிலே அவர் என்ன பேசப் போகிறார், எப்படிப் பேசப்போகிறார் என்பதை அறிய என் உள்ளம் ஆவலோடு இருந்தது மிக அமைதியான போக்கில், சரளமான நடையில், தெளிவு தரும் முறையில் திரு. ஈ. வெ. கி. சம்பத் விரிவுரையாற்றினார்.

"ம. பொ. சி.யின் அரசியல் பின்னணி முறையாக, பெருமைக் குரிய

— என்று அவர் பாட்டு காங்கிரஸில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் இருந்தும் மதிப்புக்குரியவர்கள் மேடையிலமர்ந்தும் மாநாட்டில் அடக்க முடியாத குழப்பம் ஏற்பட்டதை எனக்கு நினைப்பூட்டினர். அவர் சொன்னது சரி என்றே எனக்குப் பட்டது. ஆனாலும் தைரியத்தை விடாமல், நமக்கு யாரும் பகைவரில்லை, நாம் யாருக்கும் பகைவரல்லோம். அப்படி இருக்க மாநாட்டில் குழப்பம் எதற்காகவரும் —என்று சமாதானம் சொன்னேன்.

ஆனால், என் மனதில் என்னவோ சமாதானம் ஏற்படவில்லை. அதிலும், மாற்றுக் கட்சித் தலைவர்கள் முதல் நாள் சுயாட்சி மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனரே, அவர்கள் கண்ணெதிரே பந்தல் காலியாகக் கிடந்தால் அது தமிழரசு இயக்கத்திற்கு அவமானமல்லவா? என்று எண்ணினேன். இரவெல்லாம் உறக்கமில்லை. விடிந்ததும் என்னோடு வந்த பிரதி

பிரதிநிதிக் கட்டணத்தை குறித்த தேதிகளில் கட்டத் தவறியவர்களிடம் ஒரு ரூபாய் அதிகப்படியாக வசூலித்தார் பொதுச் செயலாளர். அதிகப்படி என்றால் 'ஆவடி' செய்தார் என்று பொருளல்ல! அதிகப்படி கட்டணம் கழகத்தின் கணக்கில் தான் வைக்கப்பட்டது. ஆயினும், அதிகப்படி என்பதற்குப்பதிலாக 'அபராதம்' என யாரோ பெயர் கொடுத்து விட்டதால் பிரதிநிதிகளில் சிலருக்குக் கோபம்! தமிழரசுக் கழகத்தார் தன் மான உணர்ச்சி கொண்டவர்களல்லவா! கோபம் கொண்ட பிரதிநிதி கொஞ்சம் கடுமையான தொனியில் அதை ஆட்சேபித்து பேசினார். அதனால் பிரதிநிதிகள் மாநாட்டில்சிறிது பரபரப்பேற்பட்டது. ஆனால், பிடாரனுக்குக் கட்டுப்படும் பாம்பு போல. தலைவர் ஆணையிட்டதும், ஆட்சேபனை தெரிவித்த பிரதிநிதி தான் தெரிவித்த கடுமையான வார்த்தைகளுக்காக வருத்தம் தெரிவித்தார்.

பிரதிநிதிகள் மாநாடு முடிந்ததும் எல்லோரும் உணவருந்தினோம். உணவு நன்றாகவே தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கென பொறுப்பேற்ற திரு. அனந்தகிருஷ்ணன் செட்டியார் அதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி மூன்று நாட்களிலும் ஓயாமல் பாடுபட்டார். அத்துறையில் அவர்களுக்குத் துணையாக நியமிக்கப்பட்டவர்களும் நன்றாக நடந்து கொண்டனர். சாப்பிட்டதும் ஓய்வுபெற நேரமின்றி நான் மாநாட்டுப் பந்தலில் முதலிடம் பிடிக்கச் சென்றேன். பல்வேறு கட்சித் தலைவர்கள் ஒரே மேடையில் காட்சியளிப்பார்களாதலால், அவர்கள் பரஸ்பரம் கலந்து பழகுவதையும் அருகே இருந்து கண்டுகளிக்க மேடைக்கு அருகே இடம் பிடிக்க முயன்றேன்.

மாநில சுயாட்சி மாநாடு நான்கு மணிக்குத் துவங்குவதாக இருந்தும்

தாக அமைந்திருக்கிறது. என் அரசியல் பின்னணி அப்படி அல்ல. அது பயங்கரமானது. அது எப்படி எப்படியோ வளைவும் நெளிவும் கொண்டது" என்று சம்பத் கூறியபோது மாநாட்டில் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது.

மேலும், அவர் பேசுகையில், அரிசனங்கள் கோயில் நுழைவு பெற்றது போல, இந்த மாநாடு எனக்கு ஆலயப் பிரவேச உரிமை வழங்கியிருக்கிறது - என்றார். திறந்த மனத்தோடு அவர் தெரிவித்த இந்தக் கருத்து எல்லோருடைய மனங்களையும் கவர்ந்து விட்டது. ஆம்; மாநாட்டு மேடையிலே மிகப் பெரிய அளவில் கம்பீரமாக தமிழ்த்தாயின் உருவம் வைக்கப்பட்டிருந்ததால், தமிழ்த் தாயின் கோயிலில் திரு. சம்பத்துக்கு பிரவேச உரிமை கிடைத்தது போலத் தான் இருந்தது.

(12ம் பக்கம் பார்க்க)

மாநில சுயாட்சியே அவசரப் பிரச்னை

பிரிந்து வாழும் உரிமை, பிறர் கொடுத்துப் பெறுவதன்று; தமிழினத்தாரின் பிறப்புரிமை!

சமஷ்டி என்பது சாம்ராஜ்யமானால், பிரிவினை தவிர்க்க முடியாததாகும்

சுயாட்சி மாநாட்டில் ம. பொ. சி. பேச்சு

தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாட்டின் முதல் நாளாகிய 19-1-62ல் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் தலைவர் ம. பொ. சி. நிகழ்த்திய சொற்பொழிவு வருமாறு:

இன்று - இங்கு நடைபெறும் மாநில சுயாட்சி மாநாடு தமிழக வரலாற்றில் நிகழும் ஒரு புதுமை.

உறையூரிலே பயிற்சி!
வேலூரிலே ஒத்திகை!

மூன்றாண்டுகளுக்கு முன்பு உறையூரில் முதன்முதலாக மாநில சுயாட்சி மாநாடு நடத்தினோம். அதில் யான் நிகழ்த்திய தலைமையுரை 'பிரிவினையா, சுயாட்சியா?' என்ற பெயரில் நூல் வடிவில் வெளிவந்திருக்கிறது. அந்த மாநாடுகூட தமி

தமிழரசுக் கழகம், தான் பிறந்த நாள்தொட்டே மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரி வருகிறது. நமது கழகம் தமிழகத்தில் மட்டுமே இயங்கிவரினும், அதனுடைய அரசியல் கொள்கை அகில இந்திய ரீதியில் அமைந்திருக்கிறது. உரிமைக்கு எல்லை வேங்கடமாயினும், உறவுக்கு எல்லை இமயம்-என்பதே நம்முடைய கொள்கை. நாம் தேசிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலால், பிரிவினைகோரும் போக்கில் நாம் செயல்பட முடியாது.

அவரே சொல்லக் கேட்டீர்கள். ஆனால், அவர் இப்போது மனமாற்றம் அடைந்திருக்கிறார். அதற்கு நாம் மதிப்புத்தர வேண்டும். வாழ்க்கையில் தவறு ஏற்படுவது இயற்கை. அதனை உணரும்போது, மனதை மாற்றிக் கொள்வதே மனிதப் பண்பு. மனமாற்றத்துக்கு மதிப்பு தர மறுத்தால். தீமை நிரந்தரமாக நிலைத்துவிடும். ஆகவே, நண்பர் சம்பத் அவர்களின் மனமாற்றத்திற்கு மதிப்பளித்து தமிழரசுக் கழகத்தின் சார்பில் மனமார வரவேற்கிறேன்.

நிலைமை மாறி வருகிறது!

நாம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இடைவிடாமல் பாடுபட்டு வந்ததன் விளைவாக, தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை மாறி வருகிறது. திராவிடத் தனி நாட்டுக் கொள்கையைப் பெற்றெடுத்த தந்தையான ஈ. வே. ரா., "வேண்டாம் அந்த வெங்காய நாடு" என்று வெறுப்போடு கூறுகிறார். அவர் மைந்தர் ஈ. வெ. கி. சம்பத், திராவிட நாட்டுக் கொள்கையை வெறுப்பதோடு, ஆக்க வழியிலும் அணுகி மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரிக்கிறார். ஆளுங் கட்சித் தலைவரான காமராசரும் நம்மோடு வரத்தானே வேண்டும். வந்தால்தானே அதிகாரம் நிலைக்கும்.

இரு பெருந் தீமைகள்

இன்றைய நிலையில், இந்திய சமுதாயத்தை மொழிவாரி இனங்களின் கூட்டுக் குடும்பமாகவும், இந்தியாவை மொழிவாரி இனங்களின் தாயகங்கள் கொண்ட உபகண்டமாகவும் ஏற்க மறுக்கிறது, இந்திய தேசிய காங்கிரஸ். ஆம்; இந்தியமக்களை இனம் இனமாக எண்ண மறுத்து, தலை தலையாக எண்ணுகின்றது காங்கிரஸ். அதுதான் "ஏக இந்தியா"க் கொள்கை.

அதிலுள்ள தவறை எடுத்துக் காட்டி, இந்தியா ஒரே நாடு அல்ல என்றும், இந்தியர் அனைவரும் ஒரே இனத்தவர் அல்லரென்றும் கூறி, திராவிடத் தனி நாடு கேட்கிறது தி. மு. கழகம். இந்த இரண்டுமே தமிழினத்திற்குத் தீமைப்பயக்கத்தக்கவை என்று கருதுகிறது நம் கழகம்.

மூன்றாவது அணி!

ஏக இந்தியா கொள்கை, தமிழினத்தை அடிமைப்படுத்தும் ஆதிக்க வெறி. திராவிடத் தனி நாடு அனுபவ சாத்தியமற்ற கானல் நீர். இந்த இரண்டிற்கும் எதிராக மூன்றாவதான ஒரு கொள்கைதான் "மாநிலங்களில் சுயாட்சி; மத்தியில் சமஷ்டி" என்பது. அந்தக் கொள்கைக்கு

முரசுக் கழகத்தார் மட்டுமே கலந்துகொண்டதுதான். இன்று -இந்த மாநாட்டில் தமிழரசுக் கழகத்தாரேயன்றி கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு, தமிழ் தேசியகட்சி ஆகிய வேறு கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் "சர்வ கட்சி மாநில சுயாட்சி மாநாடாக" நடைபெறுகின்றது.

கொஞ்ச காலத்திற்கு முன்பு அகில இந்திய ரீதியில், சர்வ கட்சி மாநில சுயாட்சி மாநாடு ஒன்றைச் சென்னையில் நடத்த வேண்டுமென்று தமிழரசுக் கழக மத்திய செயற்குழு தீர்மானித்தது. அதற்கான ஒத்திகையாகவே தமிழக அளவில் இந்த மாநாடு நடைபெறுகிறது. விரைவில் அகில இந்திய மாநாடொன்றையும் தலைநகரில் நடத்துவோம்.

காங்கிரசை அழைத்தோம்

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரையும் அழைத்தோம். அவரிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. தி. க., தி. மு. க., நாம் தமிழர் இயக்கங்களின் தலைவர்களை நான் அழைக்கவில்லை. காரணம், அவர்கள் உடனடியாகவும், எத்தகைய நிபந்தனையற்ற முறையிலும் தனிநாடு கோருவதுதான்.

பின்னணி என்ன ?

நண்பர் ஜீவானந்தம் கூறியது போல, அவருக்கும் எனக்கும் உள்ள பின்னணிச் சரித்திரம் தேசிய பாரம்பரியத்தோடு பிணைந்துள்ளதாகும். நண்பர் சம்பத் நிலைமை வேறு. அதனை

இனி, அடுத்த காட்சியில் நண்பர் அண்ணாத்துரையும் "வேண்டாம் திராவிட நாடு, வேண்டுவது மாநில சுயாட்சியே" என்று கூறுவதையும் காண்போம். அந்த நாள் வரும்போது, அண்ணாத்துரையும் நமது மேடையில் காட்சியளிப்பார். அப்புறம்

ஆதரவு தேடும் மூன்றாவது அணியே இந்த மாநாடு. இந்த அணி நாளுக்கு நாள் விரிவடையுமென்றே நம்புகின்றேன். இன்று இந்த மேடையில் கூடியவர்கள், இனி பிரியமாட்டார்கள். பிரிந்

(4-ம் பக்கம் பார்க்க)

மூவர் தரும் காட்சி!

BANU STORE
VELLORE

படத்தில் நடுவில் மாலையுடன் நிற்கிறார் தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாட்டின் தலைவர் ம. பொ. சி. இடப்புறத்தில் நிற்பவர் மாநில சுயாட்சி மாநாட்டுத் தலைவர் கவி. கா. மு. ஷெரீப். வலப்புறத்தில் நிற்பவர் மாநில மாநாட்டு வரவேற்பு குழுத் தலைவர் வே. கி. குப்புசாமி.

பிரிவினைக்குச் சட்டத்தில் விதி வேண்டாம் - அது, பிரிவினையாளருக்கே வெற்றி தரும்!

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

திருப்பவர்கள் வெகு விரைவில் நம்மோடு கூடுவார்கள். "தமிழினமே ஒன்றுபடு" என்பது நம் கோஷம். அப்படி ஒன்றுபட ஒரு கொள்கை வேண்டாமா? அந்தக் கொள்கைதான் நாம் கோரும் மாநில சுயாட்சி.

'இந்தி'யர் தேசிய இனமாம்! தமிழர், ஜனக்கும்பலாம்!

றில் ஒரு பங்கினர் ஆதரவு கிடைக்காது. தாம் விரும்பினால் அரசியல் சட்டத்தைத் திருத்தவும், தாம் விரும்பாதபோது திருத்த மறுக்கவும் இந்தி மொழியாளருக்கு உரிமை வழங்கும் போக்கில் அரசியல் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம் இப்படியே நீடித்தால், ஒரு தலைமுறைக்குள் இந்தி மொழியாளர் ஆதிக்கம் இந்தியா முழுவதிலும் ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்தியப் பாராளுமன்றத்தை மக்கள்

கொள்ளும் ஆற்றலும் அவர்களுக்கு இருக்கும். தமிழகத்தின் எதிர்கால சந்ததியார் நம்மினும் வீரர்களாக, உரிமை யுணர்ச்சி உடையவர்களாக இருப்பார்களேயன்றி, கோழைகளாகவோ, அடிமை யுணர்ச்சி உடையவர்களாகவோ இருக்கமாட்டார்கள். சுயாட்சித் தமிழகத்தில் அந்த இழி குணங்கள் கொண்ட தமிழன் பிறக்கவே மாட்டான்.

முன்கூட்டி எழுதிவைத்தால்

மாநிலம் பிரிந்து போய்விட்டால் என்ன செய்வது?" என்ற ஐயப்பாடும், தமிழகத்தின் தேசிய உணர்ச்சியில் சந்தேக நினைப்பும் மத்திய சமஷ்டிக்கேயன்றி, வடக்கிலுள்ள மாநிலங்களுக்கும் என்றென்றைக்கும் இருந்து கொண்டே இருக்கும். அந்த நிலை தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குக் கேடு பயக்கத் தக்கதாகும்.

மாநில சுயாட்சி கோரும் அதே நேரத்தில், பிரிந்து போகும் கோரிக்கையையும் வற்புறுத்திக் கொண்டிருந்தால், முதல் கோரிக்கைக்கு இரண்டாவது கோரிக்கை முட்டுக் கட்டையாகிவிடும். அதோடன்றி, உடனடியாகப் பிரிவினை கோரும்

இன்றைய அரசியல் அமைப்பு, தமிழ் பேசும் மக்களை ஒரு தனி தேசிய இனமாக அங்கிகரிக்கவில்லை. அதே நேரத்தில், இந்தியை இந்தியாவின் தேசியமொழியாகச் செய்ததன் வாயிலாக, இந்தியா முழுவதையும் ஆளும் உரிமை பெற்ற மூத்த தேசிய இனமாக இந்தி மொழியாளரை ஏற்றுக் கொள்ளுகிறது.

இது, இந்தி மொழி பேசாத தேசிய இனங்களுக்கு, தேசிய ஒருமைப்பாட்டின் பெயரால் இழைத்துள்ள கொடுமையாகும்.

இந்தியை ஏற்க நிபந்தனை

இந்தி மொழியை இந்தியாவின் பொது மொழியாக்கும் முயற்சியை நம் கழகம் எதிர்க்கவில்லை; ஏற்கிறது. ஆனால், அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. தமிழரைத் தனி தேசிய இனத்தவராக, தமிழகத்தை தமிழினத்தின் தாயகமாக, தமிழ் மொழியை தமிழ் நிலத்தில் எங்கும் – எதிலும் வழங்கும் ஒரே தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டால் மட்டுமே, இந்தியை இந்தியாவின் பொதுமொழியாக ஏற்க முடியும்.

பாராளு மன்றத்தில் இந்தி மொழியாளர் அதிக அளவில் அங்கம் வகிக்கின்றனர். காரணம், மத்திய அரசு இந்திய தேசிய இனங்களின் கூட்டரசாக இல்லாமல், இந்திய மகா ஜனங்களின் ஏக அரசாக இயங்கி வருவதுதான். மாநிலங்களுக்கு அவற்றின் மக்கள் தொகைக்கேற்பப் பாராளு மன்றத்தில் இடந் தரப்பட்டுள்ளது. அதனால், உத்தரப் பிரதேசம், பீஹார், மத்தியப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய இந்தி மாநிலங்களின் சார்பில், இந்தி மொழியாளர்கள் பாராளு மன்றத்தை நிரப்பிக் கொண்டிருக்கின்றனர். மராத்தி, குஜராத்தி மொழியினரும் இந்தி மொழியாளரின் போக்கிலேயே செயல்படக்கூடியவர்கள். இந்நிலையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமானால், பாராளு மன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அதனை ஆதரிக்க வேண்டும். இன்றுள்ள பாராளு மன்றத்தில் இந்தி மொழியாளர் இசைவு தந்தாலொழிய, மூன் சபையாக அல்லாமல், மாநிலங்களின் கூட்டு சபையாக மாற்றி, எல்லா மாநிலங்களுக்கும் சம அளவில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

பிரிந்து வாழ்வதா ?

மத்தியில்-பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புக்களை விட்டு வைத்து, மற்ற எல்லா பொறுப்புக்களும் மாநிலங்களுக்கே உரிமையாக்கப்படல் வேண்டும். இதுவே நம் கழகத்தின் அரசியல் கொள்கை–கோரிக்கை.

நண்பர் சம்பத், இந்திய தேசிய ஐக்கியத்தை ஏற்று, தமிழகத்துக்குச் சுயாட்சி கிடைக்க நமக்குத் துணை நிற்கிறார். அத்துடன் நின்றால் நமக்கும் அவருக்கும் வேற்றுமை இருக்காது. ஆனால், அதற்கு மேலே ஒருபடி சென்று “விரும்பினால் பிரிந்து வாழும் உரிமை மாநிலங்களுக்கு இருக்க வேண்டும்” என்கிறார். நான் சொல்லுகிறேன், இயற்கையாகவே நமக்கு அந்த உரிமை இருக்கிறது. நாம் கோரும் சமஷ்டி, மாநிலங்கள் தாமே விரும்பிக் கலந்து அமைத்துக் கொள்வதேயன்றி, யாரோ ஒரு இனத்தவர் கட்டாயத்தின் பேரில் இணைத்து வைப்பதன்று. மத்திய சமஷ்டியின் அதிகாரங்கள், மாநிலங்கள் தாமே தம் விருப்பத்தின் பேரில் கொடுத்து வைத்தவையே யன்றி, மத்திய ஆதிக்கம் தானாகவே எடுத்துக் கொண்டதன்று. இந்தப் பார்வையில், அமைய விருக்கும் சமஷ்டியை நண்பர் சம்பத் பார்ப்பாரேயானால், பிரிந்து வாழும் உரிமையை அவர் வற்புறுத்த மாட்டார். வற்புறுத்தத் தேவையில்லை என்பதையும் அவர் உணருவார்.

சந்ததியார் விரத்தில் சந்தேகம் வேண்டாம்!

மத்திய சமஷ்டியில் இணைந்திருப்பதால் தீமை விளையுமானால், அல்லது மத்திய சமஷ்டியானது தமிழகத்தை அடிமைப்படுத்தி அதன் மீது ஆதிக்கம் செலுத்தத் துணியுமானால், அப்போதைய நிலையில் அக்காலத்தில் வாழும் தமிழ்மக்கள் பிரிந்து வாழவே விரும்புவார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றிக்

முன்னேற்றம் தடைப்படும்

அரசியல் சட்டத்திலேயே பிரிந்து போகும் உரிமையை எழுதி வைப்பது, பிரிவினையை விரும்பும் புத்தியை அரசியல் வட்டாரத்திலே வளர்ப்பதற்குத் தான் துணை புரியும். பிரிவினை என்பது, எந்த ஒரு நாட்டிலும்–எந்த ஒரு காலத்திலும் மிக எளிதில் அடைந்து விடக்கூடிய ஒரு உரிமையாக இருக்கவே கூடாது. பிரிந்து வாழும் உரிமையை அரசியல் சட்டத்தில் சேர்ப்பதால், மற்றொரு கேடும் நேரக் கூடும். நாம் மத்தியில் ஒரு சமஷ்டி அமைக்க விரும்புவது அயலார் படையெடுப்பிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமன்று. இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் மூலப்பொருள்களை, நதி நீர் வசதிகளை, காட்டுச் செல்வங்களை எல்லா மாநிலங்களும் பகிர்ந்து கொள்வதற்கும் ஆகும். தொழில் துறையில் எல்லா மாநிலங்களும், பரஸ்பர உதவியின் மூலம் சம அளவில் வளர்ச்சி பெறவும் சமஷ்டி தேவைப்படுகிறது.

பிரிந்து போதும் உரிமை அரசியல் சட்டப்படி உறுதிப்படுமானால் ஏற்கனவே பிரிவினை சக்திகளுக்கு இடமளித்து விட்ட தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெருமளவுக்குப் பாதிக்கப்படும். வட இந்தியாவிலுள்ள மூலப் பொருள்களின் துணைகொண்டு, வட இந்திய மூலதனத்தின் உதவியையும் பெற்று, தமிழகத்தில் பெரிய பெரிய தொழில்களை நடத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

திரிசங்கு சுவர்க்கமா ?

தமிழகம் சுயாட்சி பெற்று விட்ட பின்னரும், பிற மாநிலங்களின் மூலப் பொருள்களை, மூலதனங்களைப் பெறவும், அதே துறைகளில் அயல் நாடுகளின் உதவியைத் தேடித்தரவும் மத்திய ஆட்சியின் உதவி நமக்குத் தேவைப்படும். ஆனால் மத்திய சமஷ்டியில் நாம் இருப்பது ஸ்திரத் தன்மை பெற்றதாக இல்லையானால், பிரிவினைக் கிளர்ச்சிகளின் பய முறுத்தல்கள் இருக்குமானால், அத்தகைய உதவிகள் நமக்குக் கிடைக்குமா?

“பெரிய பெரிய தொழில்களை தமிழகத்தில் துவக்கினால், அந்த இயக்கங்களுக்கு நம்மை அறியாமலே நாம் உதவி செய்வதாக முடிந்துவிடும்.

தணிகையில் பார்த்தோமே!

இதற்கொரு சான்று சொல்லுவேன். திருத்தணி தாலுகா தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். அந்தத் தாலுகா ஆந்திரத்திற்கே உரியதென்றும், அதனைத் தமிழகத்திற்கு வழங்க முடியாதென்றும் பிடிவாதமாகக் கூறிவந்தது ஆந்திர அரசு. ஆனால் அதே நேரத்தில் திருத்தணி தாலுகாவில் எந்த ஒரு அபிவிருத்தியும் செய்யாமல் அதனைப் பாலைவனமாக்கிவிட்டது ஆந்திரம். தனது எதிர்ப்பையும் தகர்த்து தணிகை தாலுகா பிரிந்து போய்விடுமோ என்ற அச்சம்தான்.

அது போலவே பிரிந்து போகும் உரிமை அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டு விட்டால், தமிழ்நாடானது மத்திய அரசின் சந்தேகத்திற்குரிய பிரதேசமாகவே என்றென்றும் இருந்து வரும். அது நமக்கு நல்லதல்ல.

சோவியத் நிலைமை வேறு

சோவியத் ருஷ்யாவில், ‘பிரிந்து வாழும் உரிமை’ மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மைதான். ஆனால், அங்கு அவ்வுரிமை வழங்கப்பட்ட காலம் வேறு. அப்போதிருந்த சூழ்நிலை வேறு. ருஷ்யாவில், முதலாளித்துவ சமுதாயத்தில் பிரிந்து வாழும் உரிமை வழங்கப்படவில்லை. வர்க்கப் புரட்சி வெற்றி பெற்று, முதலாளித்துவ–நிலப் பிரபுத்துவ சக்திகள் அழிக்கப்பட்டு, சோஷலிஸ சமுதாயம் அமைக்கப்படும் போதுதான் பிரிந்து வாழும் உரிமை மாநிலங்களுக்கு அளிக்கப்படும் என்று தோழர் லெனின் புரட்சியின் மத்தியிலே பிரகடனம் வெளியிட்டார். சோஷலிஸ சமுதாயத்தில் பிரிவினைச் சக்திகள் தலை தூக்க முடியாதென்று லெனின் நம்பியதால், பிரிந்து வாழும் உரிமைக்கு உத்தரவாதம் தந்தார். அதன்படி, புரட்சி வெற்றி பெற்றதும் பிரிந்து வாழும் உரிமையோடு கூடிய

[14 ம் பக்கம் பார்க்க]

வெள்ளையரை வெளியேற்றியதன்றி வேறென்ன கண்டோம் சுதந்தரத்தால்!

தமிழகம் சுயாட்சி பெற்றால்தான் தமிழும் தமிழரும் சுதந்திரம் பெற்றதாகும்!

சுயாட்சி மாநாட்டில் கவி. ஷெரிப் முழக்கம்

19—1—62ல் வேலூர் நகரில் நடைபெற்ற சுயாட்சி மாநாட்டில் கவி கா. மு. ஷெரிப் நிகழ்த்திய தலைமையுரை வருமாறு:

சுயாட்சி மாநாடு நமக்குப் புதிதல்ல. ஆனால், இந்த மாநாடு புதிது. அதாவது நாம் மட்டுமே நடத்தி வந்த சுயாட்சி மாநாட்டை இன்று மற்ற கட்சியினரையும் அழைத்து வைத்துக் கொண்டாடுகின்றோம். இதன் மூலம், தமிழரசுக் கழகம் தமிழினத்தின் தேசிய அமைப்பு என்பதை நாடறியச் செய்திருக்கிறோம்.

நமது லட்சியம் தமிழின மக்களின் தேசியப் பிரச்சினைகட்கு, கட்சி-மதங்களைக் கடந்து தமிழர் அனைவரும் ஒரே மேடையில் திரள வேண்டும் என்பதே! நமது லட்சியம்-ஐயா அவர்களின் கனவு இன்று ஓரளவுக்கு வெற்றியடைந்திருக்கிறது. ஆம், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் திரு. சம்பத், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த திரு. ஜீவானந்தம், பி. சோ. கட்சியிலுள்ள திருவாட்டி விசயலட்சுமி ஆகியோரை இன்று இந்த மேடையிலே காண்கிறோம். அடுத்து நடைபெறும் மாநாடுகளிலே மற்ற கட்சித் தலைவர்களும் நிச்சயம் கலந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. மாநில சுயாட்சி, தமிழகப்பிரச்சினை மட்டுமல்ல. அகில இந்தியப் பிரச்சினை. எனவே, சுயாட்சிக் கோரிக்கையில் ஒத்தக் கருத்துடைய இந்தியத் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபடும் நாள் அதிகதூரத்திலில்லை. நம்முடைய மேடையிலேயே அவர்களைக் கூட்டுவோம். மாநில சுயாட்சிக் கோரிக்கையை அகில அந்திய பிரச்சினையாக உருப்பெறச் செய்வோம். உரிமைக் குரலெழுப்புவோம். வெற்றி பெறுவோம்!

'சுதந்திர இந்தியாவில்சுதந்திரத் தமிழகம்' என்பது நமது குரல். ஆம், சுயாட்சித் தமிழகம் இந்தியாவுடன் இணைந்து வாழ வேண்டும் என்பதே நமது லட்சியம். இந்த லட்சியத்திற்காகக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நாம் இடைவிடாது குரல் கொடுத்து வந்திருக்கிறோம். சுயாட்சியை வலியுறுத்தி நம்மைப் போல் வேறயாரும் குரல் கொடுக்கவில்லை என்பது நமக்குரிய பெருமை. ஆம், தலைநகர்ப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை, பெயர் மாற்றப் பிரச்சினை ஆகியவைகளிலெல்லாம் நாம் ஈடுபட்டிருந்த நாட்களில் கூட சுயாட்சியை நாம் மறந்ததில்லை.

வெளிநாட்டுறவு, பாதுகாப்பு, போக்குவரத்து என்ற மூன்று அதிகாரங்களை மட்டும் நாமாக மனம் ஒப்பி மத்திய அரசுக்கு விட்டு மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டியங்குவதைத்தான் நாம்சுயாட்சிஎனக் குறிப்பிடுகிறோம்.

நமக்கென்று கொடி, நமக்கென்று தேசிய கீதம், மத்திய அரசு நியமனம் செய்கின்ற கவர்னருக்குப் பதிலாக மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாநில ஜனாதிபதி, இந்த ஜனாதிபதியின் கீழ் இயங்கும் அமைச்சரவை. அந்த அமைச்சரவையில் இன்றிருப்பது போல முதலமைச்சரிருக்கமாட்டார். பிரதமர் இருப்பார். அவருக்கு எல்லா அதிகாரங்களும் இருக்கும்.

மத்தியத்தில் ஒரு உள்துறை அமைச்சர். மாநிலத்திலொரு உள்துறை அமைச்சர்.

மத்தியில் ஒரு கல்வி அமைச்சர். மாநிலத்தில் ஒரு கல்வி அமைச்சர்.

அங்கே ஒரு சட்ட அமைச்சர் இங்கே ஒரு சட்ட அமைச்சர்.

அங்கே ஒரு நிதி அமைச்சர். இங்கேயொரு நிதி அமைச்சர்.

இப்படி எல்லாத் துறைகளிலும் இரட்டைத் தன்மை இருப்பது நாம சொல்லுகின்ற சுயாட்சியில் இருக்காது. இத்தகு ஒரு நல்ல ஆட்சியின் கீழ்த்தான் நமதுகலை, நமதுமொழி, நமது பண்பாடு காப்பாற்றப் படுவதோடு வளரவும் முடியும். இன்றைய ஆட்சியில் நமக்கு மொழிச் சுதந்திரமில்லை. கலாச்சாரப் பாதுகாப்பில்லை. நமது கலைகட்குரிய தனித்தன்மையை வளர்க்க முடியவில்லை. பொதுவாக வெள்ளையனை வெளியேற்றியதைத் தவிர வேறு ஒரு சுதந்திரத்தையும் நாம் அடையவில்லை. நாம் அடைய வேண்டிய சுதந்திரக் கதவு தாளிடப்பட்டிருக்கிறது. திறவுகோல் மத்தியத்தில் இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும் என்ற எண்ணம் பரவலாக எல்ல மாநிலங்களிலும் ஒலிக்கக் காண்கிறோம்.

அந்த எல்லோருடைய சார்பாகவுமே நாமிந்த மாநாட்டை நடத்துகிறோம். ஆக, இந்த மாநாடு தமிழர்கட்கு மட்டிலுமல்ல. இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் பொதுவானது. இன்று பிறமாநிலங்களின் பிரதிநிதிகள் இங்கு வராதிருக்கலாம். விரைவில் வருவார்கள். அகில இந்தியக் கட்சிகளின் தமிழகப் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருப்பதே விரைவில் அகில இந்திய அடிப்படையில் நாம் நமது சுயாடசிக் கோரிக்கைக்குக் குரல் எழுப்பமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. எடுத்த எந்தத் திட்டத்திலும் நாம் தோற்றதில்லை. இந்த சுயாட்சிப் பிரச்சினையிலும் நாம் வெற்றி பெறுவோம்!

நம்மவர்களுக்கு

தமிழரசு இயக்கத் தோழர்களே! கழக ஆதரவாளர்களே! பொதுத் தேர்தலில் தமிழரசுக் கழகத்தின் கொள்கையை வரையறுத்து வேலூர் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதை அறிவீர்கள். அந்தத் தீர்மானத்தின்படி தமிழரசுக் கழகத்தினராகிய நாம் எந்த ஒரு தேசியக் கட்சியையும் முழு முழுக்க ஆதரிப்பதற்கோ முழுக்க முழுக்க எதிர்ப்பதற்கோ வாய்ப்பில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையும் அதற்கு இடந்தரவில்லை.

ஆகவே, தமிழரசுக் கழகத்தின் முக்கிய கொள்கைகளான தேசிய ஐக்கியம், சோசலிசம், மாநில சுயாட்சி ஆகிய மூன்றுக்கும் உடன்படுகின்ற அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களிலே தகுதியும் திறமையும் உடையவர்களை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

இந்த முறைப்படி மாவட்டக் கழகம் ஒவ்வொன்றும் தத்தம் மாவட்டத்தில் தமிழரசுக் கழகத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தகுதி பெற்ற அபேட்சகர்களின் பட்டியலைத் தயாரித்து சம்பந்தப்பட்ட கிளைக் கழகங்களுக்குதகவல் தந்திருக்கின்றன. அதில் குறைபாடுகள் இருப்பினும் ஸ்தாபனக் கட்டுப்பாட்டை முன்னிட்டு எல்லோரும் ஒருமனதுடன் வேலை செய்யுமாறு வேண்டுகின்றேன். வேலை செய்யும் வழி, முறை பற்றி கடந்த வார 'செங்கோல்' இதழில் யான் எழுதி இருப்பதை இன்னொருமுறை படித்துச் சரியாகப் புரிந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

மாவட்டக் கழகத்தின் முடிவு பிடிக்காவிடில் தேர்தல் வேலையிலிருந்து ஒதுங்கி நிற்க தனி நபர் எவருக்கும் உரிமையுண்டு. ஆனால், அந்த முடிவுக்கு எதிராகச் செயல்பட யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தலைமைக் கழகம் நேரில் பொறுப்பேற்றிருக்கிறது. சென்னை மாவட்டக் கழகமும் அதனோடு ஒத்துழைக்கும்.

எந்த ஒரு கிளைக்கழகமும் எந்தக் காரணத்தை முன்விட்டும் தேர்தல் வேலையிலிருந்து ஒதுங்கி நிற்பது முறையன்று. ஆகவே, எல்லாக் கிளைகளும் இயன்றவரை தேர்தல் களத்தில் இறங்கி தலைமைக் கழகம் வகுத்துள்ள வரம்புக்கு உட்பட்டுச் செயல்படவேண்டும்.

தமிழரசுக் கழகம் தமிழர் எல்லோருக்குமுரிய தேசிய அமைப்பாக இயங்கி வருவதால், எந்த ஒரு அரசியல் கட்சி மீதும் பகை உணர்ச்சி காட்டுவதோ, அதனைச் சார்ந்தவர்களைத் தூற்றிப்பேசுவதோ கூடாது. மேடை போட்டுப் பேசக்கூடிய இடங்களில் அரசியல்-பொருளாதார ரீதியில் விமர்சனம் செய்யும் வகையில் நம்மவர்களின் தேர்தல் பேச்சு அமையவேண்டும்.

தமிழரசு இயக்கப் பேச்சாளர்களை யாரேனும் ஒரு அபேட்சகர் தேர்தல் பிரச்சாரத்துக்கு அழைத்தால் சம்பந்தப்பட்ட ஊரிலுள்ள கிளைக் கழகத்தின் இசைவு பெற்றே செல்லவேண்டும்.

கூட்டத்திற்குச் செல்ல இசைவு தெரிவித்தபின்னர் எந்த காரணத்தை முன்விட்டும் செல்லாமல் இருத்தல் கூடாது.

காங்கிரசுக்குத் தார்மீக ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டுள்ள தொகுதிகளில், சிறிது தாராளமாகவே அதனைச் செய்யலாம். நமது தார்மீக உதவி அபேட்சகரால் கண்ணியத்தோடு ஏற்கப்படும் இடங்களில்தான் அதனை வழங்க வேண்டும்.

இந்த அறிக்கையில் கூறிய ஒவ்வொன்றையும் மனதில் பதிய வைத்துச் செயல்படுமாறு தமிழரசுக் கழகக் கிளைகளையும், அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் மீண்டுமொருமுறை கேட்டுக் கொள்கிறேன்.

ம. பொ. சிவஞானம்
தலைவர், தமிழரசுக் கழகம்.

தமிழுக்கு எதிராக டி. டி. கே. போர்க்கோலம்!

தமிழகத்தின் அரசியல் வேங்கடத்திற்கு வெளியே உள்ளவர்கள் புரிந்துகொள்ள முடியாத புதிர். அவலை நினைந்து உரலை இடிக்கும் அரசியல்வாதிகள் இங்கு ஏராளம், ஏராளம். அன்றொரு நாள் ஆபட்ஸ்பரி பாரதி விழாவில் தமிழுக்கு எதிராகப் பேசினார் டாக்டர் சுப்பராயன். தமிழகக் கல்வி அமைச்சருக்கு மறைமுகமாக எதிர்ப்புக் காட்டத் தூண்டிவிடப்பட்டே அவரது கல்விக்கொள்கைமீது பாய்ந்தார் குமாரமங்கலம் மாஜி ஜமீன்தார்.

திரும்பவும் இன்னொரு புயல் துவங்கியிருக்கிறது!

“தமிழால் முடியும்” என்ற நூல் வெளிபீட்டு விழாவில் திடீரென்று இந்தி மொழியின்பால் தமக்குள்ள பக்தியை வெளிப்படுத்தி திரு. சுப்ரமணியம் அவர்களின் கல்விக் கொள்கையைத் தாக்கியிருக்கிறார் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அவருடைய பேச்சுக்கு உள் நோக்கம் உண்டென்று காங்கிரசிலே ஒரு சாரார் பேசிக்கொள்கின்றனர்.

ஆனால், சி. சுப்பிரமணியத்தோடு மோதவேண்டுமென்பதற்காக தமிழுணர்ச்சியைத்தாக்கிப் பேசியிருக்கவேண்டாம் டி. டி. கே. சென்னை ராஜ்யம் என்பதனைத் தமிழ்நாடு என்று மாற்றிவிட்டதால் ஏழைக்குச் சோறு வந்துவிட்டதா என்று கேட்கிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

நாமும் கேட்கலாம், டி. டி. கே. டெல்லிக்குப் போகாவிட்டால் வானம் பூமியாகிவிடுமா? பூமி வானமாகிவிடுமா? ஏழையின் சோறு பறிபோய்விடுமா—என்று. டி. டி. கே. மந்திரியாக இல்லாமலிருந்த ஆண்டுகளில் இந்தியப் பெரு நிலத்து ஏழை சாப்பிடாமலா இருந்தான்? –என்று நாம் கேட்டால் டி. டி. கே. என்ன பதில் கொடுப்பாரோ?

ஒரு தமிழர் பேசுகிற பேச்சா இது!

போகட்டும்; பெயர் மாற்றம் டி. டி. கே.வுக்குப் பிடிக்கவில்லை என்றால், தமிழரசு அதைச் செய்யக்கூடாதென்று தமது செல்வாக்கைப் பயன்படுத்தி டி. டி. கே. தடுத்திருக்கலாம். அப்படி செய்யாமல், தும்பை விட்டு வாலைப் பிடிப்பானேன்?

இது கிடக்கட்டும். தனித்தமிழ் உணர்ச்சிகூடாதென்று அறிவுரை கூறியிருக்கிறார் டி. டி. கே. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்கவே கூடாது என்ற கருத்தைத் தமிழரசுக்கழகத்தார் என்றுமே ஏற்றதில்லை. அப்படியே தமிழில் புலமையில்லாமல், அது தம் தாய்மொழி என்ற உணர்வில்லாமல், அதன் தனித்தன்மை காப்பாற்றப்படவேண்டுமென்பதில் அசகரையில்லாமல், தமிழை மணிப்பிரவாளமாகச் செய்துவரும் போக்கினையும் நாம் ஆதரிப்பதற்கில்லை.

‘ஜில்லா’ என்ற பெயர் இருக்க, அதனை ‘மாவட்டம்’ என்று மாற்றுவானேன்? என்று கேட்கிறார் டி. டி. கே. இந்தக் கேள்வி நியாயமானதென்றால், ‘பார்லிமெண்ட்’ எனப் பழகிய சொல்லிருக்க, ‘லோக் சபா’ என மாற்றினார்களே, ஏன்?

‘பிரசிடென்ட்’ என்ற வழக்கு சொல்லிருக்க, ‘ராஷ்டிரபதி’–‘ஜனாதிபதி’ என்றெல்லாம் வடமொழியில் மாற்றுப்பெயர் கொடுத்தார்களே, எதற்காக?

‘ஆல் இண்டியா ரேடியோ’ என்ற பாமரனும் அறிந்த சர்வதேசப் பெயரிருக்க, ‘ஆகாசவாணி’ என்று மாற்றினார்களே, அதற்குக் காரணமென்ன?

இந்தக் கூத்துக்கள் எலாம் நிகழ்ந்தபோது, அதற்கெல்லாம் ஆதரவளித்த அமைச்சரவையில் டி. டி. கே.யும் அங்கம் வகித்தார். அப்போது சொல்மாற்றம் கூடாதென்று சொல்லாதது ஏன்? ஒருக்கால், இவருடைய சொல்வாக்குக்கு அங்கு செல்வாக்கில்லையா?

‘இல்லை’ என்பதே நாம் கண்ட உண்மை.

ஆனால், டி. டி. கே. சொல்லுகிறார், இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்கும் சி. சுப்ரமணியம் தமிழால்முடியும் என்று அதே நேரத்தில் கூறுவது முரண்பட்ட போக்கு’–என்று.

‘தமிழால் முடியும்’ என்பதனை தமிழனால் முடியும் என்று மாற்றிச் சொல்லவேண்டுமாம். ஆம்; தமிழை மறந்தவன், இந்தி மொழிக்கு அடிமைப்பட்டவன் டி. டி. கே. பார்வையில் தமிழனாகப் படுகிறான்.

தமிழகத்தில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே அபேட்சகர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எதிராகப் பேசுகிறார் என்றால், வடக்கே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள்?

ஏன் திடீரென்று டி. டி. கே. தமிழுக்கு எதிராகப் போர்க்கோலம் கொண்டாரோ?

டெல்லியில் இடம் பிடிக்க காங்கிரஸ்காரர்களிடையே போட்டி நிகழ்ந்தால், அது பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால், அந்தப் போட்டியிலே தமிழ் மொழியைப் போர்க்கருவியாக்க வேண்டாம்!

“வெல்வேல் தமிழர் கூட்டம்”

(திருவானைக்காவல் பி. தாமரைச்செல்வன்)

* * *

கள்ளினை சொரியும் தென்னை;
கண்படும் சூழல் கண்டு
தெள்ளென மயங்கும் உள்ளம்;
தெவிட்டிடா மாலை நேரம்;
வள்ளலா யளித்து வாழும்.
வானோ ராங்கே நன்செய்;
கிள்ளைபோல் காட்டும் மென்மைக்
கிளையான உடலே புன்செய்;

விளங்கிடும் பண்பு; வெற்றி
விளைத்திடும் தமிழர் வீரம்;
துளங்கிடும் மகிமை யாகத்
துன்பதை விரட்டும் செல்வம்;
கிளர்ந்தெழும் புதுமை வெள்ளம்;
கடலென்று பாயும் பெண்மை;
வளர்ந்தோங்கும் உயர்ந்த கற்பு
வையகத் திலேவே றுண்டோ?

மன்னிய வளமும் வாய்ப்பும்
மகிழ்நட் டிலிட்டே பின்பு
சொன்னசொல் நற்றே னூற்றி
சொக்கிடும் தமிழ்ப்பூ சேர்த்து
பண்ணுடன் நாதம் மீட்டி
பரவசித்து இனிமை கூட்டி
விண்ணக மென்றே வாழும்
வெல்வேல் தமிழர் கூட்டம்!

மானத்திற்கும் சோற்றுக்கும் வேற்றுமை தெரிந்தவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பமாட்டார்கள்.

பம்பாய் ராஜ்யமென்பதனை மகராஷ்டிரம் என்று மாற்றினார்கள். திரு–கொச்சி ராஜ்யம் என்பதனைக் கேரள ராஜ்யம் என மாற்றினார்கள். அந்தப் பெயர் மாற்றங்களை செய்வதற்கான மசோதா பாராளுமன்றத்தில் வந்தபோது அங்கு டி. டி. கே. அமைச்சர் பதவியில் வீற்றிருந்தாரே, அப்போது இந்தக் கேள்வியைக் கேட்கவில்லையே, ஏன்?

தமிழுக்குப் புதுவாழ்வு வரும் போதுதான் அது மொழி வெறியாகப்படுகிறது டி. டி. கிருஷ்ணமாச்சாரியாருக்கு?

இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுமொழி இருக்கவேண்டும், அது இந்தி மொழியாகத்தான் இருக்க முடியும் என்கிறார் டி.டி. கே. இதனைக் கொள்கை அளவில் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இந்தி பொதுமொழியாக வருவதற்கும், தமிழகத்தில் தமிழ்மொழி வளர்ச்சி பெறுவதற்கும் முரண்பாடு உண்டா?

பாராளு மன்றத் தேர்தலில்
தமிழகம் சுயாட்சி பெற,
தமிழினம் ஒன்றுபட
தென் சென்னைத் தொகுதியில்
த. தே. க. அபேட்சகராக நிற்கும்
திரு. ஈ. வே. கி. சம்பத்
அவர்களுக்கு
வோட்டு கொடுங்கள்!

மாநில சுயாட்சி கோரி போராடுவோம்!

அதிகாரங்களை மத்தியில் குவித்திருப்பது, பிரிவினை சக்திகளைப் பலப்படுத்துகிறது!

சுயாட்சி மாநாட்டில் ஜீவா முழக்கம்

19-1-62ல் வேலூர் நகரில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் திரு. ப. ஜீவானந்தம் நிகழ்த்திய சொற்பொழிவு வருமாறு:

மாநில சுயாட்சிப் பிரச்னையில் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டம் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்குத்தான் என்னை அழைத்திருக்கின்றீர்கள் என்பதை அறிவேன். மாநில சுயாட்சிப் பிரச்னையை வரலாற்றுக்கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்; மக்கள் கோணத்திலிருந்து பார்க்க வேண்டும்; எதார்த்த சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துப் பார்க்கவேண்டும்.

இந்திய அரசியல் சட்டத்தின் ஏழாவது ஷெடியூலைப் பாருங்கள். அதில் மத்திய அரசின் உரிமைப் பட்டியலில் 97 அம்சங்களும், மாநில அரசின் உரிமைப் பட்டியலில் 66 அம்சங்களும், மத்திய–மாநில அரசுகளுக்குரிய உரிமைப் பட்டியலில் பொதுவாக 46 அம்சங்களும் அளிக்கப்பட்

இயற்றியவர்களே உரிமை வழங்க மறுக்கிறார்கள். இதுவும் இன்றைய ஜனநாயகம்.

இத்தகைய தவறுகள், முரண்பாடுகள் ஏன் ஏற்படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன? இன்றைய அரசியல் சட்டத்திலுள்ள பலவீனங்களால் ஏற்படுகின்றன. நம்முடைய தலைவர்கள் ஜனநாயகம், ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றிப் பேசி வந்தார்கள். ஏகாதிபத்தியத்தைவிரட்டுவது மட்டுமல்ல. அதன் பின்னர் எப்ப

ஏகாதிபத்திய எதிர்ப்பு கூர்மையாகி இந்திய ஒற்றுமை மலர்ந்தது. ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னர், சுதந்திரப் போராட்ட பிற்காலத்தில் பிரிவினை உணர்வுகள் தோன்றியுள்ளன. வெள்ளையர்கள் ஆண்டபொழுது மன்னர்களின் சமஸ்தானங்கள், ஒருமொழி பேசுகிற மக்களைக் கொண்டல்ல, பலமொழிபேசும் மக்களைக்கொண்ட மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதற்கும், ஒரு மொழி பேசும் மக்களையே பிரிப்பதற்குமே வெள்ளையர்கள் இவ்வாறு மாநிலங்களைப் பிரித்து வைத்தனர். எனவே அப்பொழுதே மொழிவழி மாநிலக் கோரிக்கை எழும்பியது. மொழிவழி ரீதியில் காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. சுதந்திரம் பெற்றபின்னர் மொழிவழி மாநிலங்

“திராவிடநாடு திராவிடருக்கே” என்ற குரல் எழும்பியது. அன்று கேட்ட திராவிடம் வெள்ளைக்காரன் பிய்த்துப் பிய்த்துச் சேர்த்த சென்னை மாநிலம் மட்டும்தான். அந்தத் திராவிடத்திலும் புதுக்கோட்டை இல்லை; புதுவை இல்லை; குமரி மாவட்டம் இல்லை; ஐதராபாத் இல்லை. பின்னர், ஆந்திரம் பிரிந்த பின்னர் மொழிவழி மாநிலமாகிய பின்னர், “மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றுபட்ட திராவிடம்” என்று பின்னால் குரல் கேட்டது. ஆனால் அன்று “திராவிட நாடு” கூறியவர்களே இன்று “வெங்காய நாடு” என்று கூறிவிட்டார்கள். “திராவிட நாடு” பெறுவதற்கும் இன்று பல்வேறு “போராட்ட முறை” கூறுகிறார்கள். மற்றொரு குரலும் கேட்கிறது. அக்குரல் “அகண்ட தமிதமிழகம்” கேட்கிறது. இலங்கையையும் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்கிறார்களே! இன்னொரு குரலும் கேட்கிறது! பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னாட்சித் தமிழகம் வேண்டும் என்று சம்பத் கூறுகிறார். திராவிட நாட்டை வெங்காய நாடாக்கிவிட்ட மதிப்பிற்குரிய பெரியார் இப்போது சுதந்திரத் தமிழ்நாடு கோருகிறார். இதனையெல்லாம் ஏதோ நீங்கள் சிரிக்க வேண்டுமென்பதற்காகக் கூறவில்லை. சிந்திக்க வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். பிரச்சினைக்குத் தீர்வு காண எழும் இக்குரலில் உள்ள

டுள்ளன. இவற்றைப் பார்க்கும் பொழுது நாம் ஒரு பெரிய கிளர்ச்சி நடத்தித் தீரவேண்டும் என்பது தெரியும். மேற்கூறிய வாறு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், மாநில அரசுகளுக்குரிய உரிமைகளையும், பொதுவான, இணைந்த உரிமைகளையும் நடப்பிற்குக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு தலை அசைத்தாக வேண்டும். மாநில ஆட்சிக்குரிய உரிமைகளை செயல்படுத்துவதற்குக் கூட மத்திய அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும். சான்றாகக் கூறவேண்டுமெனில் நிலச் சீர்திருத்த மசோதாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு மாநில சட்ட மன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அம்மசோதாவை நிறைவேற்றலாம். ஆனால், அம்மசோதா சட்டமாகி செயலாவதற்கு குடியரசுத் தலைவர் தலையசைத்தாக வேண்டும். இதுதான் இன்றைய ஜனநாயகம்!

அரசியல் சட்டப்படி நட்ட ஈடு கொடுத்து, அன்னியரின் தோட்டக் காடுகளைத் தேசிய மயமாக்கிக் கொள்கிறோம்; நாட்டு மக்களின் பொதுச் சொத்தாக்கிக் கொள்கிறோம் என்று கேரள கம்யூனிஸ்ட் அமைச்சரவை மத்திய அரசைக் கோரியது. ஆனால், மத்திய அரசு மனம் திரும்பவில்லை. இங்கே அரசியல் சட்டம் கூறும் உரிமையைச் செயல்படுத்த முடியவில்லை. சட்டத்தை

டிப்பட்ட மக்களாட்சிஅமைய வேண்டும்என்றும் பேசி வந்தார்கள். ஆனால் அரசியல் சட்டம் இயற்றியவர்களைப் பற்றி அவர்கள் தேசிய பாரம்பரியத்தில் வந்தவர்களா இல்லையா என்பதைப் பற்றி நான் கூறத் தேவையில்லை. அரசியல் சட்டம் இயற்றியவர்கள் பெயரால் அமைப்பு முறையைக் கொண்ட அமெரிக்காவிடமிருந்தும் யூனிட்டரி அமைப்பு முறையைக் கொண்ட பிரிட்டனிடமிருந்தும் இன்னும் பல்வேறு முரண்பட்ட நாட்டு அமைப்புக்களைக் கொண்ட நாடுகளிடமிருந்தும் அவர்களின் அரசியல் சட்டங்களிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சம் பிய்த்தெடுத்து, இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதன் வினையைத்தான் இப்பொழுது பார்க்கிறோம். அதனால்தான் மொழி வழி மாநில் அமைப்பை ஒத்துக் கொண்டாலும், செயலாக்குவதற்குப் போராடவேண்டியிருந்தது.

அதன் பின்னரும் மராட்டிய மக்கள் போராடினார்கள். இன்றும் பஞ்சாப் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கள் அமைய வேண்டும், விரைவில் எல்லாப் பகுதி மக்களும்தங்கு தடையின்றி முன்னேற வேண்டும்என்பதற்காகவே முன்னோடியாக மொழிவழிக் கமிட்டிகள் அமைத்தனர். பல்வேறு மொழி பேசும் மக்களைக்கொண்டது இந்தியா என்பதைப் புறக்கணிக்க முடியவில்லை. ஆனால் நாடு விடுதலை பெற்ற பின்னர் மொழி வழி மாநிலக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படாததாலும் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் இல்லாததாலும் வெள்ளையர்கள் அவர்களுக்கு வசதிப்பட்ட மாநிலங்களில் தொழில்களைத் துவக்கி, அதன் காரணமாக சில மாநிலங்கள் முன்னேற சில மாநிலங்கள் பின் தங்கிய நிலைமையிலிருந்ததாலும் பிரிவினைக் குரல்கள் எழும்பின.

மத்திய அரசிடமும் எழும்புகின்ற பிரச்னைகளுக்கு சுமுகமாகத் தீர்வுகாணும் கண்ணோட்டம் இல்லை, இந்தி வந்தது. அதன் விளைவாக தமிழ் நாட்டை டில்லியோடு இணைத்து வைக்க மாட்டோம், லண்டனோடு கட்டிப் போட்டுக் கொள்வோம், “தமிழ் நாடு தமிழருக்கே” என்ற குரல் எழும்பியது. அதன் பின்னர் பலவினத்தைப் பார்க்க வேண்டும். இத்தகைய குரல்கள் ஏன் எழும்புகின்றன என்று பார்க்க வேண்டும்.

என்றாலும் ஒன்றை மட்டும் இடையில் நினைவுபடுத்தவிரும்புகிறேன். தேசிய இயக்கத்தில் பங்கெடுக்காதவர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து இந்திய ஒற்றுமையை அனுபவத்தில் காணாதவர்கள், மத்திய அரசின் மீது இன்றுள்ள அதிருப்தியை மட்டும் கவனத்தில் கொள்பவர்கள் பிரிவினை வாதம் பேசுவது சுலபம். ஆனால் என்னால் என்றும் அத்தகைய குரலை ஒலிக்க முடியாது. ஏனெனில் இந்திய ஒற்றுமையில் விடுதலையைக் கண்டது போலவே இந்திய ஒற்றுமையில் சோஷலிசத்தைக் காணமுடியும் என்று உறுதியாக திடமாக நம்புகிறேன். இம்மகாநாட்டின் பிரதிநிதிகளாகிய நீங்களும் நானும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழி வழி வந்தவர்களென்பதை உணர்ந்தால், இந்தியாவின் ஒற்றுமை உணர்வை மறைக்க முடியாது; மறுக்க முடியாது. தேசிய போராட்டத்தின் விளைவாக இந்தியா முழுவதிலும் எல்லா மாநிலங்களிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு ஒரே மாதிரியாக ஏற்பட்டது. இந்த ஜனநாயகப் போராட்டத்தின் வளர்ச்சி

[10-ம் பக்கம் பார்க்க]

செங்கோல்

4-2-62 ★ ஞாயிறு

வேலூர் மாநாடு

(2)

தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாட்டில் முப்பத்திரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இவ்வளவு அதிக எண்ணிக்கையுள்ள தீர்மானங்கள் முதல் மூன்று மாநாடுகளில் நிறைவேற்றப் படவில்லை; மூன்றாவது மாநில மாநாடு நடந்து முடிந்த பின்னுள்ள ஐந்தாண்டுகளில் எத்தனையோ புதிய பிரச்னைகள் தோன்றி விட்டன. பழைய பிரச்னைகளில் பல புதியவடிவம் பெற்று விட்டன. மற்று, தமிழினம் சம்பந்தப்பட்ட தனிப் பிரச்னைகளில் மட்டுமன்றி, சர்வதேசப்பிரச்னைகள், பாரதம்

தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்னையில் நாம் இதைவிட அதிகமாக எதையும் செய்வதற்கில்லை. ஆம்; இலங்கைத் தமிழரின் உரிமைப் பிரச்னை மிகவும் சிக்கல் நிறைந்ததாகி விட்டது.

ஐ. நா. மன்றத்தில் தமிழகத்திற்குத் தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுமென்று மாநில மாநாடு கோரியிருக்கிறது. இது விபரீதமானதாக தேசிய வாதிகளில் சிலருக்குத் தோன்றலாம். சோவியத் ருஷ்ய சமஷ்டியில் உறுப்பு நாடுகளாகவுள்ள உக்ரேன், பைலோ ரஷ்யா என்ற இரு மாநிலங்கள் ஐ. நா. மன்றத்தில் தனிப் பிரதிநித்துவம் பெற்றிருப்பதை இங்கு நினைவூட்டுகிறோம். இந்தியாவின் தலைமைக்கு உட்பட்ட முறையில், இந்திய அரசின் துணையைக் கொண்டே, ஐ. நா. மன்றத்தில் நமக்கு பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இது, இந்திய தேசிய ஐக்கியத்திற்கு எதிரானதன்று.

இந்தியாவின் தேசிய கீதத்தில், பஞ்சாப், மகாராஷ்டிரம், கூர்ஜரம், வங்கம் ஆகிய மொழிவழி மாநிலங்கள் குறிப்பிடப் பெறுகின்றன. தனியரசு மாநிலமாக இல்லாத உத்கல் பிரதேசம் கூட தேசிய கீதத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் 'தமிழ் நாடு' என்ற பெயர் மட்டும் இல்லை. 'திராவிடம்' என்ற கூடாரத்துக்குள்ளே மறைத்து வைக்கப் பெற்றிருக்கிறது.

தற்குமான சமூக–பொருளாதார நலன்கள், ஆகியவற்றிலும் வேலூர் மாநாடு கவனம் செலுத்தியிருக்கிறது. இந்தக் காரணங்களால், தீர்மானங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றன.

தமிழரசுக் கழகம், தமிழகத்தில் மட்டுமே இயங்கும் மாநில அமைப்பாயினும், ''உலகத்தில் நாம்'' என்ற கொள்கை உடையது. அதனுல், வல்லரசு நாடுகளுக்கு அடிமைப் பட்டுள்ள காலனி நாடுகளில் நடைபெற்று வரும் உரிமைப் போராட்டங்களுக்கு வேலூர் மாநாடு ஆதரவு காட்டியிருக்கிறது.

கோவாவின் விடுதலையோடு பாரதத்தின் சுதந்திரப் போராட்டம் பூர்த்தியாவதால், கடந்த ஒரு தலைமுறைக்கு மேலாக இந்திய சுதந்திரப் போரில் பங்கு கொண்டவர்களால் நடத்தப்பட்ட வேலூர் மாநாடு, விடுதலை பெற்ற கோவா மக்களுக்கு பாராட்டு தெரிவித்திருக்கிறது.

தமிழகத்தின் வடக்கெல்லை யாகிய வேங்கடத்தை மீட்பதில் அக்கரை காட்டியது போலவே, இந்தியாவின் வடக்கெல்லையில் சீனு ஆக்கிரமித்துள்ள பகுதியிலும் அக்கரை காட்டி, அதனை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வேலூர் மாநாடு மத்திய அரசை வற்புறுத்தி யிருக்கிறது. ஆனுல், ஒரு யுத்தத்தை ஏற்படுத்திவிடக் கூடிய முறையில் அல்லாமல், வேறு வழிகளில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் வேலூர் மாநாட்டுத் தீர்மானம் தெளிவு படுத்தியிருக்கிறது. காந்திய நெறியில் ஆழ்ந்த பற்றுடையவர்களாகிய நாம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையே யுத்தம் ஏற்படுவதை விரும்ப முடியாதல்லவா !

விலைவாசிகளைக் குறைத்தல், ஆலைத்தொழில் போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்தல், பலமுனை விற்பனை வரியை ஒருமுனையாகக் குறைத்தல் முதலிய வாழ்க்கைப் பிரச்னைகளை ஒட்டிய தீர்மானங்களையும் வேலூர் மாநாடு நிறைவேற்றி யிருக்கிறது. இனி இத்துறையில் தமிழரசுக் கழகம் விரிவான அளவில் செயல்படும் என்பதற்கு இந்தத் தீர்மானங்கள் தக்க எடுத்துக் காட்டாகும். சோஷலிசத்தில் அழுத்தமான நம்பிக்கை உடைய தமிழரசுக் கழகம், மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னையிலிருந்து நீண்ட காலத்திற்கு விலகியிருக்க முடியாது. மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னையில் அக்கறை காட்டத் தவறும் எந்த அரசியல் இயக்கமும், மக்களால் புறக்கணிக்கப் படுவது இயற்கை. அந்த விபத்துக்குத் தமிழரசுக் கழகம் இரையாகா தென்பதை வேலூர் மாநாடு விளக்கி விட்டது.

இலங்கைத் தமிழர் நடத்திவரும் மொழி உரிமைப் போராட்டத்திற்கு தார்மிக ரீதியில் ஆதரவு தெரிவித்து ஒரு

நிலை ! திராவிடத் தனிநாடு என ஒன்று இல்லை யென்று குமரிமுதல் இமயம்வரை உள்ள காங்கிரஸ்காரர்கள் தி. மு. க.விற்கு எதிராகப்பேசுகின்றனர். ஆனுல் தேசிய கீதத்தில் 'திராவிடம்' என்ற ஒரு தனி நாடு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. இது, விபரீதத்திற்கு வித்திடுவதாகும். இதைவிட வியப்பென்ன வென்ருல், பாகிஸ்தானில் சேர்க்கப் பட்டுவிட்ட சிந்து மொழி மாநிலம் கூட நமது இந்திய தேசிய கீதத்தில் இருப்பதுதான். ஆம்; முன் எப்போதோ, எதற்காகவோ ஜன கண மன பாடலை எழுதினுர் கவி. தாகூர். அந்தப் பாடல், பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, இந்திய மாநிலங்கள் மொழிவாரி திருத்தி அமைக்கப்பட்டு விட்ட பின்னர், இந்தியாவின் தேசிய கீதமாக திருத்தமின்றி நீடிப்பது சாத்தியமில்லை. இந்தக்கோரிக்கையை முதன் முதலாக இப்போதுதான் எழுப்பியிருக்கிறது தமிழரசுக் கழக மாநில மாநாடு. இனி, இது தொடரும்.

அப்படியே, பாரதியார் பாடிய ''வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்'' என்று துவங்கும் பாடலை தமிழகத்தின் ராஜ்ய கீதமாகவும் செய்யவேண்டுமென்று கோரியிருக்கிறது வேலூர் மாநாடு. இந்திய மாநிலங்களில் ஒன்ருக விளங்கும் காஷ்மீர், தனக்கென ராஜ்ய கீதமொன்றை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை எல்லா மாநிலங்களுக்கும் வழங்கப் பெற வேண்டும்.

அமெரிக்காவில், பொதுவான தேசிய கீதமொன்று இருப்பதோடு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி ராஜ்ய கீதங்களும் இருக்கின்றன. அதனுல், அமெரிக்காவின் தேசிய ஒருமைப்பாடோ, அல்லது தேசிய ஒற்றுமையோ குலைந்துவிடவில்லை. முன்னர், பழைய சென்னை ராஜ்யத்தில் திரு. டி. எஸ். அவினுசிலிங்கம் கல்வி அமைச்சராக இருந்தபோது பாரதியாரின் 'வாழிய செந்தமிழ்'ப் பாடலை தமிழகத்தின் தேசிய கீதமாகப் பயன்படுத்தலாமென்று ஆணையிட்டார். அவர் பதவி துறந்த பிறகு, பின்னுல் வந்த தமிழரல்லாத கல்வி அமைச்சர் அதனை ரத்து செய்துவிட்டார். இப்போது, தமிழகம் தனியரசு மாநிலமாகிவிட்டதால், அதற்கென ராஜ்ய கீதமொன்று இருப்பதில் தவறில்லை. அரசியல் சட்டமும் அதற்குத் தடையாக இல்லை.

புதுவை–காரைக்கால் பகுதிகளை சட்ட ரீதியாக இந்தியாவோடு இணைக்கும் சடங்கு அதிவிரைவில் நிறைவேற்றப்பெற வேண்டுமென்று வேலூர் மாநாடு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறது. போர்த்துக்கீசியரிடம் வீரம் காட்டி வெற்றி பெற்ற இந்திய அரசு, பிரெஞ்சுப் பேரரசிடம் வீரம் காட்டத் தயங்குவானேன்?

வேலூர் மாநாடு, இந்தியைப் பொது மொழியாக ஏற்பதற்கு ஒரு நிபந்தனை விதித்திருக்கிறது. அதாவது, மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்காதவரை, இந்தியை இந்தியா

வின் பொதுமொழியாக தமிழகம் ஏற்க இயலாதென்று தீர்மானித்திருக்கிறது. அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தியை இந்திய அரசின் நிர்வாகமொழியாக்கினுல், இந்தி மொழி வழங்காத மாநிலங்களின் உத்தியோக நலன்கள் பாதிக்கக்கூடுமென்று வேலூர் மாநாடு எச்சரித்திருக்கிறது. இந்தி மொழி பற்றிய இந்தத் தீர்மானம், இந்தியாவின்பொது மொழிப்பிரச்னையில்ஏற்பட்டுள்ள ஒரு புதிய திருப்பமாகும். ஆம்; பொது மொழிப் பிரச்னையைப் பணயமாக்கி தமிழகத்திற்கு சுயாட்சி தேட வழி காட்டி யிருக்கிறது வேலூர் மாநாடு.

எதிர்ப்பு இயக்கத்தின் நியாயத்தை சாதாரணப் பொதுமக்களும் அறிந்துகொள்ளும்படி பிரசாரம் நடைபெறவேண்டும். ஏனெனில், தமிழகத்து மக்களில் ஒவ்வொருவருமே ஆங்கில மோகத்துக்கு இரையாகி யிருக்கின்றனர். தமிழ் மொழியில் பட்டம் பெற்றுள்ள புலவர்கள் கூட இந்த விபத்துக்கு விலக்கன்று. இந்த நிலையில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டால் வெற்றி கிடைக்காது. ஆகவே, மக்களிடையே எதிர்ப்பு உணர்ச்சியை வளர்க்கும் அளவில் தான் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் அமையும். தமிழரசுக் கழகம் ஆங்கில மொழி கற்பதையே எதிர்ப்பதாகக் கட்டுப்பாடான பொய்ப்பிரச்சாரம் நடைபெறுகிறது.

கேரளத்தோடு சேர்க்கப்பட்டுவிட்ட தேவிகுளம்-பீருமேடு தாலுக்காக்களையும், ஆந்திரத்தோடு இணைக்கப்பட்டுவிட்ட திருப்பதி மலையையும், திரும்பவும் தமிழகத்தோடு இணைக்கவேண்டுமென்று கோரி, அதற்காக தனியாக ஒரு எல்லைக்கமிஷன் அனுப்ப வேண்டுமென்றும் மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. இந்தக் கோரிக்கையானது தீர்ந்துபோன ஒன்றைத்திரும்பவும் கிளறுவதாக ஒரு சிலர் நினைக்கக்கூடும். அது தவறு. தீர்ந்துபோனதாக அறிவிக்கப்பட்ட மைசூர்-மகாராஷ்டிர எல்லைச் சிக்கல் திரும்பவும் விவாதத்திற்கு உரியதாகி, அதைத் தீர்த்து வைப்பதற்கு ''மத்தியஸ்தக் கமிஷன்'' ஒன்றும் நியமிக்கப்பெற்றிருக்கிறது. அதே நியாயத்தைக்கொண்டு தேவிகுளம்-பீருமேடு தாலுக்காக்களுக்கும், தமிழக வடக்கெல்லைப் பிரச்னைக்கும் எல்லைக் கமிஷனை ஏன் நியமிக்கக்கூடாது? எல்லைச் சிக்கலில், மராத்தியருக்கு ஒரு நீதி, தமிழருக்கு ஒரு நீதியா?

வடக்கெல்லைச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு முன்புள்ள இடைக்காலத்தில் திருப்பதி தேவஸ்தான போர்டு உறுப்பினர்களை நியமனம் செய்வதில், தமிழக அரசுக்கும் உரிமை தரப்படவேண்டுமென்று வேலூர் மாநாடு வற்புறுத்தியிருக்கிறது.

1953-ல் ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டபோது, திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாக உரிமைபற்றி சிக்கல் எழுந்தது. அப்போதிருந்த தேவஸ்தான போர்டு, திருப்பதி கோவில் நிர்வாகத்தை ஆந்திர-தமிழக ராஜ்யங்களின் கூட்டுப்பொறுப்பில் வைக்க வேண்டுமென்றும், அதுசாத்தியமில்லையேல், மத்திய அரசின் நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்றும், அப்போது திருப்பதிக்கு வருகை தந்த ஜனாதிபதி ராஜன்பாபுவிடம் விண்ணப்பித்துக் கொண்டது.

ஆந்திரம் பிரிந்துபோவதற்கு முன்பிருந்த பழைய சென்னை ராஜ்யத்தில் கூட, திருப்பதி தேவஸ்தான போர்டிற்கு ஆந்திரர்-தமிழர் ஆகிய இரு சாராரும் சம எண்ணிக்கையில் நியமிக்கப்பெறுவது வழக்கமாக இருந்தது. திருப்பதியோடு கூடிய ஆந்திர மாநிலம் பிரிந்துபோன பின்னர் இந்த வழக்கம் கைவிடப்பட்டு விட்டது.

ஆந்திரம் பிரிந்து போனபோது முதலமைச்சர் பதவி வகித்த ராஜாஜி அவர்கள்,

> ''திருப்பதி மீது அரசியல் ரீதியில் தமிழர் உரிமை கொண்டாட முடியாது. ஆனால், கலாச்சார ரீதியில் திருப்பதி கோயில் நிர்வாகத்தில் தமிழருக்கு உரிமையுண்டு. அது உரிய காலத்தில் கோரப்படும்''

—என்று அசெம்பிளியிலே பேசியது நமக்கு நினைவிருக்கிறது. அப்போது அறத்துறை அமைச்சராக இருந்த திரு. கே. வேங்கடசாமி நாயுடு அவர்களும், திருப்பதி கோயில் மீது தமிழகத்திற்கும் உரிமையுண்டு என்பதை வலியுறுத்தியிருக்கிறார். ஆம்; வேலூர் தீர்மானம் சரித்திரப் பின்னணியில்லாத வீண் கோரிக்கையன்று.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி போராட்ட வடிவம் பெறவேண்டுமென வற்புறுத்தியும், அதற்கான திட்டம் தயாரிக்க மாநாட்டுத் தலைவருக்கு அதிகாரமளித்தும், வேலூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறது. பொதுத்தேர்தலுக்குப் பிறகு ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போர் துவங்குமென்றும் மாநாட்டுத்தலைவர் அறிவித்திருக்கிறார். ஆரம்பத்தில் இது ஒரு அடையாள போராட்டமாகத்தான் இருக்கும். ஏனெனில், தொடர்ந்த போராட்டம் நடத்துவதற்கு முன்னர், ஆங்கில ஆதிக்க இதனை எதிர்த்து, 'கழகம் வெறுப்பது ஆங்கில மொழியை அல்ல; அதனுடைய ஆதிக்கத்தையே' என்பதை மக்கள் உணரும்படிச் செய்யவேண்டும். இதில் வெற்றி கிடைத்துவிட்டால், மறுகணமே ஆங்கில மொழியின் ஆதிக்கம் அழிந்துவிடும்.

தமிழ்நாட்டுக் கோயில்களில் அர்ச்சனை தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தும் தீர்மானமொன்றும் வேலூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அர்ச்சனை மொழி காரணமாக ஆத்திகரிடையே பிளவு ஏற்பட்டிருப்பதைப் பயன்படுத்தி, அந்தப் பிளவுக்கு நடுவே புகுந்து, ஆத்திகரில் தமிழ்மொழியில் பற்றுகொண்ட குழுவினரை நாத்திகப் பாதைக்கு இழுக்க முயல்கின்றார் ஈ. வே. ரா. சிற்சில பலவீனங்களுக்கு இரையாகிவிட்டவர்கள் ஈ. வெ.ரா.வின் துணைகொண்டு, தமிழை அர்ச்சனை மொழியாக்கப் போவதாகப் பேசித் திரிகின்றனர். இதிலுள்ள அபாயத்தை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது அர்ச்சனை மொழி பற்றிய வேலூர் தீர்மானம். இத்துறையில் நாத்திகம் வளர்வதற்கோ, வகுப்புவாத நஞ்சு கலப்பதற்கோ இடமளிக்காமல், ஆலயத்தில் தமிழுக்கு வாழ்வுதேட வேண்டுமென்பதே நம் கொள்கை.

நாகரி லிபியில் தமிழை எழுதுவதற்கு ஆதரவு தேட டில்லி செய்துவரும் பெருமுயற்சியை, அதற்கு உள்ளூர ஆதரவளித்துவரும் மாநில ஆட்சியின் போக்கை வேலூர் மாநாடு வன்மையாகக் கண்டித்திருப்பதோடு, அம்முயற்சி அடியோடு கைவிடப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

வேலூர் கோட்டையிலுள்ள கோயில் விக்கிரகம் இல்லாத வெறும் கோயிலாக இருந்து வருகிறது. இந்த நிலை, அந்நகரிலும் நாடு முழுவதிலுமுள்ள ஆத்திக மக்களின் உள்ளங்களைப் புண்படுத்தியிருக்கிறது. ஆகவே, வேலூர் கோட்டைக் கோயிலில் மீண்டும் விக்கிரகத்தை நிறுத்தி, அதனை மக்கள் வழிபடும் புனித இடமாக மாற்றவேண்டுமென்று வேலூர் மக்கள் தெரிவித்துள்ள கோரிக்கைக்கு மாநில மாநாடு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

வேலூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்ற தீர்மானங்களைப் பற்றி இங்கே விவரிக்கத் தேவையில்லை.

பொதுவாக, மாநாட்டில் தீர்மானங்களை நிறைவேற்றிவிடுவது எளிதான செயல்தான். ஆனால் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் கஷ்டங்கள் இருக்கின்றன. இருப்பினும், நமது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பது உறுதி. பொதுவாக, வேலூர் மாநாடு எல்லா வகையிலும் சீரும் சிறப்புமாக நடந்து முடிந்திருக்கிறது. வேலூர் மாநாட்டை நேரில் கண்டவர்கள் தமிழரசுக் கழகத்தை அலட்சியப்படுத்தி விடமுடியாது. நமது கழகம் வளர்ந்து வரும் புதிய தேசிய சக்தி என்பதனை வேலூர் மாநாடு உலகறியச் செய்து விட்டது. இதற்குக் காரணமாக இருந்த வரவேற்புக் குழுவினரையும், மாநாட்டுப் பிரதிநிதிகளையும், தலைமைக் கழக நிர்வாகிகளையும், மற்றுமுள்ள நமது இயக்கத் தோழர்களையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

வாழ்க, தமிழரசுக் கழகம்.

மாநில சுயாட்சி இல்லையேல், பிரிவினை அபாயம் வந்தே தீரும்!

—*—

சுயாட்சி மாநாட்டில் எஸ். கே. பி. பேச்சு

19-1-62ல் தமிழரசுக் கழக நான்காவது மாநில மாநாட்டின் முதல் நடவடிக்கையாக மாநில சுயாட்சி மாநாடு மாலை 4-மணிக்கு வேலூர் கோட்டைத் திடலில் அமைக்கப்பட்ட பாரதி பந்தலில் ஆரம்பமானது. அவ்வமயம் மாநாட்டிற்கு வந்திருந்த பல்வேறு கட்சித் தலைவர்களையும், மாநாட்டுத் தலைவர், பிரதிநிதிகள், பார்வையாளர்கள் ஆகியோரை வரவேற்று பூவிருந்தவல்லி வழக்கறிஞர் திரு. எஸ். கே. பாலசுப்பிரமணியம் நிகழ்த்திய வரவேற்புரை வருமாறு:

தமிழரசுக் கழகம் வலுயுறுத்தி வரும் பல கொள்கைகளில் மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் சமஷ்டி என்ற கொள்கையே கழகத்தின் உயிர் போன்றதாகும். இந்தக் கொள்கைக்கு வெற்றி தேட அகில இந்திய ரீதியில் சர்வகட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடொன்றை நடத்தவேண்டுமென்று இரண்டாண்டுகளுக்கு முன்பு தமிழரசுக் கழக மத்திய செயற்குழு முடிவெடுத்தது. அதையொட்டியே சிறிது தாமதத்திற்குப் பிறகு, இன்று-இந்த மாநாடு கூட்டப்பெற்றிருக்கிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்பு கூட்டப் பெற்றிருந்தால் திரு. சம்பத் அவர்கள் அந்த மாநாட்டில் கலந்துகொண்டிருக்க இயலாது. கால தர்மதம் ஏற்பட்டதும் ஒரு வகையில் நமக்கு நன்மையையே அளித்திருக்கிறது.

பதினைந்து ஆண்டுகளாக நாம் மாநில சுயாட்சி கோரி தொடர்ந்து கிளர்ச்சி நடத்தி வந்திருக்கிறோம். மொழிவழி தமிழ் மாநிலம் பெற்றதோ, தெற்கெல்லை-வடக்கெல்லைப் பகுதிகளை மீட்டதோ, தமிழை ஆட்சிமொழியாக்கியதோ, தலைநகரான சென்னையைக் காத்ததோ நம் கழகத்தின் தனித் தனிக் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியல்ல. மாநில சுயாட்சிக் கோரிக்கையின் ஆரம்ப வெற்றிகளே அவை.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தேசத்தைத் துண்டாடும் கொள்கையுடைய கட்சிகளைத் தவிர ஏதேனும் ஒரு வகையில் தேசிய ஐக்கியத்தை ஏற்கும் அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் தமிழரசுக் கழகம் அழைப்பு விடுத்தது. அவற்றில் காங்கிரஸ் கட்சியைத்தவிர, மற்ற மூன்று கட்சிகளின் தலைவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களை எலாம் மகிழ்ச்சியோடு, மிக்க மதிப்போடு தமிழரசுக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன்.

பாரதம் சுதந்திரம் பெற்ற நாள்தொட்டே மாநில சுயாட்சி கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார் நம் தலைவர் ம. பொ. சி. காங்கிரஸ் வலியுறுத்தும் தேசிய ஐக்கியத்திற்கு நாம் பகைவர்கள் அல்லோம். ஆனால், இன்று நடைமுறையிலுள்ள அரசியல் சட்டம் அதிகாரங்களை எலாம் மத்தியில் குவித்து, மொழிவாரி தேசிய இனங்களின் தனித் தன்மையை மறுத்து, ஆதிபத்திய அரசை டில்லியில் அமைத்திருக்கிறது. இதனால் விளையும் கேடுகள் பல. அந்தக் கேடுகளைப் பயன்படுத்தி அபாயகரமான பிரிவினைக் கிளர்ச்சியை நடத்தி வருகின்றன தமிழகத்திலுள்ள சில அரசியல் கட்சிகள். அதற்கு எதிராகவும் தமிழரசுக் கழகம் மாநில சுயாட்சி கோருகிறது. இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்காவிட்டால் அவர்களும் நாமும் எதனை விரும்பவில்லையோ, அந்தப் பிரிவினைக்கு விரும்பியோ, விரும்பாமலோ மத்திய அரசு துணைபுரிந்ததாகவே இருக்கும்.

அந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காகவும், தமிழரசுக் கழகம் மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கி, தேசிய ஐக்கியத்தைக் காக்குமாறு மத்திய அரசினரை வற்புறுத்துகின்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் கட்சிகள் ஒன்றுபட்டால், தமிழினத்தின் சார்பில் ஒன்றுபட்ட உரிமைக் கிளர்ச்சியை நாம் நடத்த முடியும். கவி. கா. மு. ஷெரீப் அவர்கள் தமிழரசுக் கழகத்தில் நீண்டகாலமாக இருந்து வருவதோடு, பொதுச் செயலாளராகவும் இருந்து கழகத்தின் வளர்ச்சிக்குப் பணி புரிந்து வரும் அவரை இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்தித் தருமாறு அழைக்கிறேன்.

இதில் கலந்து கொள்ளும், த. தே. க., கம்யூனிஸ்டு, பி. சோ. கட்சித் தலைவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

மாநில சுயாட்சி கோரி....

[7ம் பக்கத் தொடர்ச்சி]

யில் தேசிய இனஉணர்வு மலர்ந்தது. அது வங்கத்தில், மராட்டியத்தில், தமிழகத்தில், கேரளத்தில் தெளிவாக ஏற்பட்ட அளவு வேறு பல மாநிலங்களில் ஏற்படவில்லை. இதில் மாநிலத்திற்கு மாநிலம் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி இருந்தது. எனினும் காலத்தின் அடிச்சுவடும் ஒற்றுமை உணர்விற்கான பாதையைத்தான் காண்பிக்கிறது. பிரிவினைக்கு ஜாடை கூட காட்டவில்லை.

ஆனால், பிரிவினைக் குரலுக்கு வித்திடுவது யார்? மத்திய அரசின் தப்பான கொள்கைதான் பிரிவினைக் குரலுக்கு இடம் கொடுக்கிறது. பிரிவினைக் குரல் ஒடுங்கவும் ஒழியவும் என்ன செய்ய வேண்டும்? மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும், எல்லா மாநிலங்களையும் சமத்துவமாக நடத்தி, பின்தங்கிய மாநிலங்கள் முன்னேறிய மாநிலங்களை எட்டிப் பிடித்து எல்லா மாநிலங்களும் ஏக காலத்தில் வளர்ச்சியுறுவதற்கு வழி வகுக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக அரசியல் சட்டத்தை திருத்தியாக வேண்டும்.

இந்திய ஒற்றுமையில் தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெற வேண்டும்; அதே போன்று ஒவ்வொரு மாநில மக்கள் தங்கள் உரிமையைப் பெற வேண்டும். எனவே மாநில சுயாட்சிப் போராட்டம் அனைத்து இந்திய மக்களின் போராட்டமாகும். தமிழகமக்களின் வாழ்க்கைவளர்ச்சி போராட்டமாகும். ஆனால் சிலர் தவறாகக் கூறுவதுபோல இந்தப் போராட்டம் மையத்திலிருந்து மாநிலம் விடுதலை பெறும் போராட்டமல்ல; நல்வாழ்வுப் போராட்டமாகும். ஒவ்வொரு மாநிலமும் தங்கு தடையின்றி வளருவதற்கான போராட்டமாகும்.

சமத்துவ உணர்ச்சியோடு கூடிய பல்வேறு மாநிலங்கள் ஒன்றுபடும் பொழுதுதான் உண்மையான இந்திய ஒற்றுமையைக் காண முடியும். மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகள் அதிக அதிகாரம் பெற வேண்டும் என்று கூறினால் மட்டும் போதாது. மாறிவரும் அதிகாரம் மக்களுக்கு வரவேண்டும். மாநில அரசு ஊராட்சி, நகராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டும். இதற்கான போராட்டத்தை, அனைத்து இந்தியப் போராட்டத்தை துவக்கியாக வேண்டும்.

உருவிலும், உள்ளடக்கத்திலும், பாராளுமன்ற அமைப்பு முறையைப் பலப்படுத்துவதற்கும், அந்தப் பாராளுமன்ற அமைப்பை ஜனநாயகத் தேவைகளுக்கும், மக்களின் உள்ளுணர்ச்சிகளுக்கும் ஏற்ப இயங்கச் செய்வதற்கும், அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் ஜனநாயகத்தை விரிவுபடுத்துவதற்கும் பேரொலியாக வேண்டும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் அரசியல் சட்டத்தின் தலைவர் என்ற முறையில் இருக்கவேண்டும். அவருக்கு அதீத அதிகாரங்கள், அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கும் அதிகாரங்கள் இருக்கக்கூடாது. ஒரு மாநில அரசு சட்ட மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில் அந்த அரசை நீக்குவதற்கு குடியரசுத் ததலைவருக்கோ, மத்திய அரசிற்கோ அதிகாரம் இருக்கக்கூடாது. கவர்னர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்கான போராட்டத்தை-ஜனநாயகத்தை விரிவுபடுத்துவதற்கான போராட்டத்தை அனைத்து இந்திய ரீதியில்தான் நடத்த முடியும்.

எல்லாத் தேர்தல்களிலும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் தேவை. மேல் சபைகள் கலைக்கப்பட வேண்டும். பாராளு மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் அங்கம் பெற்றிருக்கிற கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட நிரந்தரக் குழுக்கள் நிறுவி, இக்குழுக்களே ஒவ்வொரு அமைச்சர் இலாகாவின் கொள்கையையும் வகுக்க வேண்டும். மொழிவழி மாநிலங்கள் பூரணமாக அமைக்கப்பட வேண்டும். இந்த அம்சங்களை கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதையும் நீங்கள் காண முடியும்.

இதற்கான போராட்டத்தை அனைத்து இந்திய ரீதியில்தான் நடத்த வேண்டும்; நடத்தியாக வேண்டும்.

இப் போராட்டத்திற்கு நடுவிலும் சுதந்திரப் போராட்டத்தில் மலர்ந்த இந்திய ஒற்றுமையைக் காப்போம், பிரிவினை சிர்குலைவுச் சக்திகளை முறியடிப்போம் என்று சபதம் கொள்வோம்.

பிரிவினை வாதத்தின் சாயலால் கூட ஏற்படவிருக்கும் அபாயம் கவனத்திற் குரியது. "பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன் ஆட்சித் தமிழகம்" என்ற கோஷத்திற்குள் கூட ஏகாதிபத்திய வாதிகள் ஒளிந்து கொள்வதற்கு இடமிருக்கிறது. எனவே இன்றைய உலகச் சூழ்நிலையில் பிரிந்து போகும் உரிமை கோருவதைப்பற்றி மீண்டும் நண்பர் சம்பத் ஆய்ந்து பார்க்க வேண்டும். இன்று ஏகாதிபத்தியவாதிகள் என்ன செய்கிறார்கள். ஏகாதிபத்திய வாதிகள் நாடுகளைப் பிரிப்பதன் மூலம் புதிய காலனி ஆதிக்க முறையைப் பரப்ப முயற்சிக்கிறார்கள் இதனை தென் கொரியாவில், தென் வியத்நாமில், கடாங்காவில் பார்க்கிறோம். பிரிவினை வாதத்தை, வகுப்பு வாதத்தை சாதிய

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

ஊர்வலம் காணாத கண்ணென்ன கண்ணே!

ஜனவரி 20ந் தேதி யன்று காலை வேலூர் நகரத்தின் வரலாறு காணாத மாபெரும் ஊர்வலம். ஊர்வலம் என்றால், ஜனக் கும்பல்களைத் திரட்டி வீதியிலே நடைபோட விட்டு, அநாகரீகமான கூக்குரல்களை எழுப்புகிறார்களே அதுபோன்றதன்று. தமிழினத்தின் பண்பாடு மணக்கும் ஊர்வலம்.

சாலை 8 மணிக்கு பாதாள ஆஞ்சநேயர் கோயிலிலிருந்து ஊர்வலம் புறப்படுமென அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால், நேரத்தோடு ஊர்வலம் புறப்படவில்லை காரணம் விடியற்காலை மூன்று மணி வரை உறக்கமின்றிக்கிடந்தனர் பிரதிநிதிகளும், தொண்டர்களும். அதற்கு மேல் உறங்கப்போனபின் காலை 5 மணிக்கே விழித்தாலும் வெட வெட வென்று நடுக்கும் குளிரில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடிய வில்லை.

பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் நகர மாந்தருடையநிலையும் இதுதான் அதனால் சரியாக 8 30 மணிக்குத் தான் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தின் வரிசையிலே அணி அணியாக .பலவேறு கலைக் குழாம்கள் சென்ற காட்சியை ஊர்வலத்தின் இருபுறமும் பாதையிலே மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்த நிகழ்ச்சியைக் கவிஞன் தான் வருணிக்க வேண்டும். நான் கவிஞனல்லவே. ஊர்வலத்தின் தலைப்பில் மாநாட்டுத் தலைவருடைய மைந்தன் ம. சி. திருநாவுக்கரசு சைக்கில் மோட்டாரில் அமர்ந்து சென்றார். தந்தைக்கு மகனாக இருப்பதை மறந்து, தலைவருக்குத் தொண்டனாக இருப்பதிலே அவருக்கு ஒரு தனி மகிழ்ச்சி!

அதே சைக்கில் மோட்டாரில் திரு. தெய்வமணியும் உடன் சென்றார். அதையடுத்து நான்கு குதிரைகள் கையிலே கொடி தாங்கிய தளபதிகளைச் சுமந்து கொண்டு கம்பீர நடை போட்டுச் சென்றன.

ஆம், நான்காவது மாநாடு என்பதனை நினைப்பூட்டவே இந்த நான்கு புரவிகள் முன் சென்றன.

பின் சிலம்பக் குழாங்கள் தங்கள் வித்தைகளை விளையாடிக் காட்டிய வண்ணம் சுற்றியிருந்த மக்களின் கவனத்தைக் கவர்ந்து சென்றன. திரு. ராஜாபாதர் தலைமையில் வீரபாண்டியன் உடற்பயிற்சி மன்றத்தார். சைதாப் பேட்டை கட்டமொம்மன் கலைமன்றத்தார் ஆகிய இரு கோஷ்டியினரும் தனித்தனியே சிலம்பம் விளையாடிச் சென்றனர்.

அதற்குப் பின்னே தணிகைமலை சென்றது. ஆம்; திருத்தணி மாதிரி கரகம் அமைத்து, அதனைத் தலையில் வைத்து விளையாடிச் சென்றார் ஒருவர் இன்னொருவர் சென்னை நகரத்தை நினைப்பூட்டும் வகையில் ரிப்பன் கட்டிடத்தோடு கூடிய கரகம் ஒன்றைத தலையில் வைத்து விளையாடிச் சென்றார்.

தமிழரசுக் கழகத்தார் தணிகையைமீட்டனர். தலைநகரைக்காத்தனர் என்பதனை நினைப்பூட்டவே இந்தக் கரக விளையாட்டுகள்.

சைதை திரு. சுப்பிரமண்யம் குழுவினர் இதனை நடத்தி வந்தனர்.

இவைகளையடுத்து, ஒரு மோட்டார் வான்சென்றது. அதிலே இசைப் பாடகி குருவாயூர் பொன்னம்மாள், திருவாளர்கள் ராம்மூர்த்தி, தேவன் இருந்தனர். அதிலே அமைக்கப்பட்ட ஒலி பெருக்கியின் துணை கொண்டு தமிழரசு இயக்கப் பாடல்களை தமக்கே உரிய உண்மை உணர்ச்சியுடன் பாடிக் கொண்டு சென்றனர். பொன்னம்மாள் குழுவினர்.

இசை ஒலிக்குப் பின்னே, விசேஷ உடையணிந்து அணிவகுத்துச் சென்றது தொண்டர்படை! தளபதி ஏ. ரா. பக்தவத்சலம் தளபதிக் குரிய தனிச் சின்னங்களை அணிந்து கொண்டு உற்சாகமாகப் படைக்கு முன்னே பவனி சென்றார்.

இந்த இராணுவப் படைக்குப் பின்னே, தமிழகத்தின் பல ஊர்களிலுமிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான கிளைக் கழகங்களின் பிரதிநிதிகளும் தொண்டர்களும் தத்தம் ஊரின் பெயர் பொறித்த துணித் தோரணங்களையும். தமிழரசுக் கொடிகளையும் தாங்கிய வண்ணம் இருவர் இருவராக ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு அணியாக ஒரு மைல் நீளத்திற்கு அணிவகுத்துச் சென்ற காட்சி மனத்தைக் கவரத்தக்கதாயிருந்தது.

அந்தத் தோரணக் கொடிப் பந்தலுக்கு நடுவே, கோயில் பிரசாரம் போன்றதொரு திறந்த வெளி காட்சி அளித்தது. அதன் ஒருமுனையிலே தமிழகத்திற்கே உரிய இசைக் கருவிகளான நாதசுரமும், அதன் துணைக்கருவிகளும் ஒலி எழுப்பிச் சென்றன. நாதசுர கலைஞர்களான குப்பிசாமி, ராதாகிருஷ்ணன் தங்கள் வாழ்நாளில் கிடைக்காத ஒரு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தவர்களாய்க் கடமை புரிந்தனர்.

மார்க்கபந்து குழுவினரின் பாண்டு வாத்தியங்களும் மிகக் கம்பீரமாக ஒலித்துச் சென்றன.

இவையன்றி, கிராமப்புற நாகரீகத்தைக் குறிக்கும் தாரை, தப்பட்டை, பறை முதலிய கருவிகளும் முழங்கின.

இந்த இசைக் கோஷ்டிகளை அடுத்து 'மூலவர்' பவனி சென்றார். மாநாட்டுத் தலைவர ம. பொ. சி. வீதி உலா சென்றதையே இங்கு குறிப்பிடுகிறேன்.

(தொடரும்.)

புதுமை கண்டேன்

(உமையாள்புரம் சுப்ரமண்யம்)

—*—

ஞாலத்தில் சுழல்கின்ற காலத் தேவன்
ஞாயிற்றின் சுடரொளியில் உயிர்கள் யாவும்
கோலவிழி திறந்தெங்கும் தவழும் காட்சி
கொப்பளிக்கும் விந்தையிலே புதுமை கண்டேன்!

வானத்தின் காரிருளைப் போக்கி யெங்கும்
வண்ணமுடன தண்ணொளியை இரவில் தந்து
தேனமுதப் பசுமைதவழ் பயிர்கள் தோற்றம்
தெவிட்டாத பேரெழிலில் புதுமை கண்டேன்!

மலைமுகட்டி னுச்சியிலே மேகம் சூழ்ந்து
மழையெனவே பெய்தங்கே வழியும் போது
அலைமோதித் தவழ்கின்ற நீரின் போக்கு
அருவியெனத் தோற்றவதில் புதுமை கண்டேன்!

அடிவானம் தொடுகின்ற கடலின் மேலே
அலையினங்கள் துள்ளிவிளை யாடும் போது
விடிவெள்ளி போல் தோற்றம் முத்துச் சிப்பி
வேலையினுள் தேடுவதில் புதுமை கண்டேன்!

மேருமொரு அணுவாகி பறந்தும் போகும்
மேல்பறக்கும் அணுவுமொரு மலையும் ஆகும்
பாரினிலே தோன்றுகிறை பொருளி லெல்லாம்
படர்ந்திருக்கும் பொய்மையிலே புதுமை கண்டேன்!

இறைவனுமே நமக்களித்த இயற்கைப் பேற்றை
'எனக்குத்தான் உரிமை' யெனப்பேசிப் பேசி
முறைவழுவி நடக்கின்ற மனிதர் கூட்டம்
முடிவறியா மடமையிலே புதுமை கண்டேன்!

திருத்தம்

தமிழசுக் கழக நான்காவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 28-1-62 'செங்கோல்' இதழில் வெளியாகியிருக்கின்றன. அத்துடன் கீழ்வரும் தீர்மானத்தையும் சேர்த்து வாசித்துக் கொள்ளவும்.

" புதுவை இராச்சியம் " செயல் பூர்வ மாற்றத்திற்குப் பின் திரிசங்கு நிலையில் இருக்கிறது. ஆதலால் உடனடியாகச் சட்ட பூர்வமாற்றம் செய்யுமாறு பிரஞ்சு அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் தூண்ட வேண்டும் என இம்மநாடு கேட்டுக்கொள்வதோடு, புதுவைப் பிரதிநிதி சபைக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் இம் மாநாடு கோருகின்றது.

[12ம் பக்கத் தொடர்ச்சி]

ம. பொ. சி. பேச்சுக்குப் பிறகு, மாநில சுயாட்சி மாநாடு முடிந்தது.

உடனே நானும் என்னோடு வந்த நண்பர்களும் உணவுச் சாலைக்குச் சென்று இரவு உணவை முடித்துக் கொண்டு மாநாட்டுப் பந்தலுக்குவந்தோம்.

இரவு பத்துமணிக்கு நகைச்சுவை நடிகர் தங்கவேலு குழுவினர் 'மனைவியின் மாங்கல்யம்' என்ற நாடகத்தை நடித்தவர். ஓய்விலாத உழைப்பால் ம. பொ. சி. பெரிதும் களைத்திருந்தார் என்றாலும், நடிகர் குழுவினரை கௌரவிக்க நாடகத்திற்கு வந்திருந்து இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு விடுதிக்குச் சென்றார்.

நாடகத்தின் இடையே நடிகர் தங்கவேலு பேசுகையில்,

தமிழரசுக் கழகம் மிகவும் புனிதமான ஒரு இயக்கம். அதனிடமும் அதன் தலைவர் ம. பொ சி. யிடமும் எனக்கு அளவு கடந்த மதிப்புண்டு நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனல்ல. ஆனாலும் விரைவில் ஏதேனும் ஒரு கட்சியில் சேர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அது எந்தக் கட்சி என்று ,நான் சொல்ல மாட்டேன். இப்போது நான் பேசியதிலிருந்து நீங்களே புரிந்து கொள்ளுங்கள் -என்று கூறியபோது கூட்டத்திலிருந்த சிலர் "தமிழரசுக் கழகம்-தமிழரசுக் கழகம் என்று கூறினர். 19ந் தேதி, நாடகத்தின் முடிவோடு மாலை 4 மணிக்கு பாரதி பந்தலில் துவங்கிய முதல் நாள் மாநாடு 20ம் தேதி அதிகாலை 3 மணிக்கு முடிந்தது. அன்று காலை 8 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெற இருந்ததால், இடையில் இருக்கும் சிறிது நேரத்தில் உறங்க எண்ணி நானும் நண்பர்களும் விடுதிக்குச் சென்றோம். விடுதி என்றால் 'பாரதி பந்தலிலேயே ஒருபுறத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பிரதிநிதிகள் முகாம்தான்.